கருத்து மோதலாக இருக்கவேண்டும். ரெபராண்டம் வேண்டுமா வேண்டாமா என்ற விஷயங்களில் போகாமல் வேண்டுமென்ருல் எம்.ஜீ.ஆர். அவர்கள் இந்த மன்றத்தில் வந்து முதல் அமைச்சர் அவர்களும் அவர்களும் வாதிட்டால் நாங்கள் எல்லோரும் மிகவும் சந்தோஷப்படுவோம். நாங்கள் எல்லாம் எதிர்கட்சிகளில் இருந் தாலும் இத்தகைய சுவையான வாதங்களை ரசித்துக்கொண்டிருக் கிருேம். நீங்கள் இருவரும் ஒரே கட்சியில் இருந்தவர்கள். மறு படியும் நீங்கள் இருவரும் ஒரே மேடையில் பேசுகிறீர்கள் என்ருல் தமிழ்நாட்டிலுள்ள பொதுமக்கள் எல்லோரும் என்னென்ன காரி யங்கள் எல்லாம் நடக்கின்றன என்று ஆவலோடு பார்த்துக் கொண்டிருக்கிருர்கள். அந்த நல்லதொரு காரியத்தை அதி விரைவில் அவர்கள் செய்யவேண்டும் என்று தங்கள் மூலம் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை இதோடு முடிக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி:** தலைவர் அவர்களே, காவல் துறை மானியத்தின் மீது ஆளும் கட்சியின் சார்பிலும், எதிர் கட்சிகளின் சார்பிலும் பல்வேறு கருத்துக்கள் இரண்டு நாட்களாக எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. பேசியவர்களின் மிகச் சிலர், சொல்லப் போனுல் ஓரிருவர்தான், காவல் துறையில் இருக்கிறவர்கள் இன்னும் பல சலுகைகளைப் பெறவேண்டும், அவர்களுக்கு இன்னும் பல உதவிகள் அரசின் சார்பில் செய்து கொடுக்கப்படவேண்டும், காவல் துறை இன்னும் நல்லமுறையில் செயல்படுவதற்கு நவீன யுக்திகளை எல்லாம் கையாளுகிற முயற்சிகளை செய்ய அரசு முன்வரவேண்டும், என்கின்ற கருத்தை எடுத்துச் சொன்னுர்கள்.

பெரும்பாலானேர் இந்த முறை காவல் துறை மீது மிகக் கடுமையான விமர்சனங்களைச் செய்திருக்கின்ருர்கள். குறிப்பாக அவரவர்களுடைய தொகுதிகளில் நடைபெற்ற ஓரிரு சம்பவங்களை இங்கே எடுத்துக்காட்டி, காவல் துறையினர் மிகக் கடுமையாக நடந்துகொண்டார்கள் என்ற குற்றச்சாட்டுகளைச் சொல்லி அந்தக் கருத்துக்களை மிக வேகத்தோடு எடுத்துரைத்து இவைகளுக் கெல்லாம் தக்க நிவாரணங்களைக் காண வேண்டும் என்ற அளவில் தங்களுடைய பேச்சுக்களை முடித்திருக்கிருர்கள்.

நம்முடைய பழைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேசுகிற நேரத்தில் பல சம்பவங் களைக் குறிப்பிட்டுக் காட்டி அது சம்பந்தமாக காவல் துறையினர்,

1975 எப்ரல் 3] [டாக்டர் மு. கருணாநிதி]

வழக்குகள் பதிவு செய்திருப்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். மற்றும் சிலர் வேறு சில சம்பவங்களில் வழக்குகள் பதிவு செய்யப்படவில்லை என்பதை எடுத்துச் சொன்னார்கள். பதிவு செய்யப்படவில்லை என்பதாலேயே பதிவு செய்யப்படாமலேயே போய் விடும் என்பது பொருள் அல்ல. திட்டவட்டமான புலன் விசாரணைகளுக்குப் பிறகு உரிய வழக்குகள் தொடர்புடைய நிகழ்ச்சிகளின் மீது நிச்சயமாகத் தொடுக்கப்படும் என்பதை நான் இங்கு தெரிவித்துக் கொள்வேன்.

ஒவ்வொரு மானியக் கோரிக்கையை விவாதிக்கிற நேரத்திலும் சொல்லப்பட்டுள்ள எல்லாக் கருத்துக்களுக்கும் பதில் அளிக்க எனக்கு நேரமில்லாவிட்டாலும் அந்தந்தத் துறையினுடைய அமைச்சர்கள்,அந்தந்த துறையினுடைய அதிகாரிகள் இந்த விவாதத்தைக் கவனிக்கிற வாய்ப்பைப் பெற்றிருக்கின்ற காரணத்தால் அதற்கான வழிவகைகளை ஆராய்ந்து சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகளில் உண்மை இருக்குமானால் உடனடியாக நடவடிக்கை எடுக்க அனைவரும் கடமைப்பட்டிருக்கிறார்கள், அதிகாரிகள் உள்ளிட்டு என்பதையும் நான் இந்த அவையில் கூறிக்கொள்வேன்.

நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் பிரிட்டிஷார் காலத்திலிருந்தே காவல் துறை நிர்வாகம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது, நாங்கள் என்ன புதிதாக இதிலே செய்துவிட்டோம் என்றெல்லாம் கேட்டார். நான் சில புள்ளிவிவரங்களை அந்த அடிப்படையிலே அளிக்க வேண்டியது அவசியமாகும்.

1969-1970-ம் ஆண்டு வரையில் காவல் துறைக்காகச் செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 13,66,42,500 என்றிருந்தது. இந்த ஆட்சி அமைந்த பிறகு காவல் துறையினுடைய பொறுப்பை நான் எடுத்துக்கொண்ட பிறகு ஆண்டுதோறும் இரண்டு கோடி ரூபாய், மூன்று கோடி ரூபாய் என்றளவிற்கு உயர்ந்து 1969-1970-ல் ஏறத்தாழ 13½ கோடி ரூபாயாக இருந்த செலவு இன்று 1974-75-ல் ரூ. 25,99,65,000 என்கின்ற அளவிற்கு அந்தச் செலவு வளர்ந்திருக்கிறது.

எப்படி இந்த அளவிற்கு அந்தத் தொகை உயர்ந்திருக்கிறது என்று பார்த்தால், காவல் துறையில் இருக்கிற அலுவலாளர்களுக்கு அவர்களுடைய உழைப்புக்கு ஏற்ற ஊதியமும் அகவிலைப்

படி உயர்வும் தரவேண்டுமென்று இந்த அரசு விரும்பியதன் காரணமாக, அவர்கள் தங்களுடைய உயிரையும் பணயமாக வைத்து ஈடுபடுகிற பணியில் இன்றைக்கு இருக்கிறவர்கள் என்ற காரணத்தால் அவர்களுடைய சம்பளத்தில் பல மாறுதல்களை நாம் செய்திருக்கிறோம்.

1970-ம் ஆண்டு வரையில் கான்ஸ்டபிள் என்று சொல்லப்படுகிற இரண்டாவது நிலை காவலாளருடைய அடிப்படைச் சம்பளம் 70 ரூபாயிலிருந்து 95 ரூபாய் என்கின்ற அளவிற்குதான் இருந்தது. 1970-க்குப் பிறகு அந்த அடிப்படைச் சம்பளத்தை உயர்த்தி 150 ரூபாயிலிருந்து 225 ரூபாய் வரை என்கின்ற அளவிற்கு அதை நாம் மாறுதல் செய்திருக்கிறோம்.

முதல் நிலை காவலாளர் என்ற பதவியே இல்லாமல் இருந்தது. அந்தப் பதவியை உருவாக்கி எஸ்.எஸ்.எல்.ஸி. படித்தவர்களுக்கு, வேலையற்றிருப்பவர்களுக்கு இத்தகைய வேலைவாய்ப்பைத் தரலாம் என்ற நல்லநோக்கத்தோடு முதல் நிலைக் காவலாளர்கள் என்ற பதவியை அமைத்து அவர்களுடைய அடிப்படைச் சம்பளம் ரூ. 200-ல் இருந்து ரூ. 300 வரை என்று நிர்ணயித்தோம்.

தலைமைக் காவலாளர்களுடைய ஊதியம் 1970-ம் ஆண்டு வரையில் ரூ. 90-ல் இருந்து ரூ. 110 வரை இருந்ததை ரூ. 210-ல் இருந்து 325 ரூபாய் வரை என்று மாற்றினோம்.

துணை உதவி ஆய்வாளர்களுக்கு ரூ. 110-140 என்றிருந்தது 1970-ல். இப்போது ரூ. 250-ல் இருந்து ரூ. 400 வரையில் என்று மாற்றியிருக்கிறோம்.

உதவி ஆய்வாளர்களுக்கு ரூ. 140-ல் இருந்து ரூ. 220 வரை என்று இருந்ததை இப்போது ரூ. 300-500 என்ற அளவிற்கு உயர்த்தியிருக்கிறோம்.

துணை ஆய்வாளர்கள் என்ற பதவி எற்கனவே இல்லை. அந்தத் துணை ஆய்வாளர் டெப்டி இன்ஸ்பெக்டர் என்ற பதவியை உருவாக்கி ரூ. 350-ல் இருந்து ரூ. 600 வரையில் அவர்களுக்கு ஊதியம் வழங்குகிறோம்.

இன்ஸ்பெக்டர்களுக்கு ரூ. 225-375 என்றிருந்தது. அதை ரூ. 425-ல் இருந்து ரூ. 700 என்ற அளவிற்கு இன்றைக்கு மாறுதல் செய்திருக்கிறோம்.

1975 ஏப்ரல் 3] [டாக்டர் மு. கருணாநிதி]

இதைப் போலவே இன்றைக்கு அவர்களுடைய அகவிலைப்படியும் எந்த அளவுக்கு உயர்த்தப்பட்டு இருக்கிறது என்றால், மற்ற அரசு அலுவலாளர்களுக்கு எல்லாம் உயர்த்தப்படுகிற நேரத்தில், அதோடு இணைத்து உயர்த்தப்படுகிறது என்பதையும் அவையில் இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள்.

நவீன கருவிகள் காவல் துறைக்கு வழங்கப்படுவதன் மூலம் இன்னும் இந்தத் துறை செம்மையாகச் செயல்பட க் கூடும் என்ற வகையில் 1971-72-ம் ஆண்டில் கம்பியில்லாத் தந்திக் கருவிகள், குற்றம் சார்ந்த அறிவியல் ஆய்வுக்கூடக் கருவிகள், நிழற்படக் கருவிகள், இவைகளுக்கு மாத்திரம் இந்த அரசு செலவு செய்த தொகை ரூ. 24,87,228.

1972-73-ல் பிராட்மா இயந்திரங்கள், நுண் திரைப்படக் கருவிகள், ரசாயன ஆய்வுக்கூடக் கருவிகள் ஆகியவைகளுக்காக செலவிட்ட தொகை ரூ. 35,29,786.

1973-74-ல் மேலும் செலவிட்டது இதற்காக 43 லட்ச ரூபாய்.

1974-75-ல் நுண் மின் அலைத் திட்டம் என்கிற நவீன முறையைப் புகுத்துவதற்காக ஏறத்தாழ செலவு 25½ லட்ச ரூபாய்; ஆக, இந்த வகையில், 1 கோடியே 29 லட்சம் ரூபாய் வரையில் நவீன கருவிகளைக் காவல் துறையில் பயன்படுத்த அரசின் சார்பில் நாம் செலவிட்டு இருக்கின்றோம்.

1971-ம் ஆண்டு தான் முதன்முதலாக 100 கிராம காவல் நிலையங்களுக்கு—ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் ஒரு மோட்டார் சைக்கிள் வேண்டும் என்ற கோரிக்கை இந்த மாமன்றத்தில் எழுப்பப்பட்டு, அதை நாம் ஏற்றுக்கொண்டு—100 மோட்டார் சைக்கிள்களை அனுமதித்து, நாம் வழங்கினோம். அந்த அறிவிப்பைத் தொடர்ந்து இது வரையில் 440 மோட்டார் சைகிள்கள் போலீஸ் ஸ்டேஷன்களுக்கு வழங்கப்பட்டு இருக்கின்றன. மொத்தமுள்ள 863 காவல் நிலையங்களில் 440 நிலையங்களுக்கு இப்போது வழங்கப்பட்டு இருக்கின்றன. 1975-76-ல் மேலும் புதிதாக 50 மோட்டார் சைக்கிள்கள் போலீஸ் ஸ்டேஷன்களுக்காக வழங்கப்பட இருக்கின்றன. இதையும் சேர்த்து, 490 மோட்டார் சைக்கிள்கள் நாம் வழங்குவது காவல் துறையினர் சம்பவங்கள் நடைபெற்று விடுகின்ற இடங்களுக்குச் செல்லுகின்ற நேரத்தில் விரைவாகத் தங்களுடைய பணியைச் செய்ய உதவும்.

இதைப் போலவே, காவல் துறையினருக்கு சைக்கிள்கள் வேண்டும். அதை இந்த அரசு ஒப்புக்கொண்டு, அவர்களுக்கு வழங்க வேண்டும் என்கிற ஒரு கோரிக்கை இந்த மாமன்றத்தில் உறுப்பினர்களால் எடுத்து வைக்கப்பட்டபோது அதையும் 1973-ம் ஆண்டு இந்த அரசு ஏற்றுக்கொண்டு, 5,000 சைக்கிள்களுக்கு முதல் கட்டமாக நாம் ஒப்புதல் அளித்து, அந்த சைக்கிள்களுடைய விலையில் 40 சதவிகிதத்தை அரசு உதவித் தொகையாகத் தருவது என்றும், மீதித் தொகையை கடனுகத் தவணை முறையில் செலுத்துவது என்றும் நாம் ஆணை பிறப்பித்தோம். அந்த 5,000 மிதி வண்டிகளில் ஏறத்தாழ 2,500 மிதி வண்டிகளைத் தான் காவல் துறையினர் இதுவரையில் பெற்று இருக்கிருர்கள். மற்றவர்கள் இன்னும் அதை வாங்க முன்வரவில்லை என்பதையும் நான் இங்கே கூறிக்கொள்வேன்.

1967-ம் ஆண்டு வரையில் காவல் துறைக்கு இருந்த வாகனங்களுடைய எண்ணிக்கை 742 என்கிற அளவில் தான் இருந்தது. 1967-க்குப் பிறகு 1974-வரையில் கூடுதலாக 906 வாகனங்கள், காவல் துறைக்கு வழங்கப்பட்டு இருக்கின்றன. ஆக மொத்தம் இன்றைக்கு—742 வாகனங்களாக இருந்தவை 1,648 வாகனங்கள் என்கிற அளவில் காவல் துறைக்கு அமைந்து இருக்கின்றன.

இவைகளை நான் சொல்லக் காரணம் காவல் துறை என்பது அதிலே இருக்கிற 45,000 காவலர்கள் மாத்திரம் இருந்து நடத்துவது என்பது அல்லாமல் அவர்களுக்கு உரிய வசதி வாய்ப்புகளை அளிப்பதன் மூலம்தான் அந்தத் துறை நல்ல முறையில் விரைந்து செயல்பட முடியும் என்பதற்காக நாம் செய்துள்ள ஏற்பாடுகளைக் குறிப்பிட்டேன்.

863 காவல் நிலையங்களிலும் தொலை பேசி வைக்கப்படவேண்டும் என்ற இந்தக் கோரிக்கை இதே மன்றத்தில் ஆளும் கட்சி உறுப்பினர்களாலும், எதிர்க்கட்சி உறுப்பினர்களாலும் பலமுறை எடுத்துச்சொல்லப்பட்டு, இன்று 722 காவல் நிலையங்களில் தொலை பேசி வசதிகளை நாம் அரசின் சார்பில் வழங்கி இருக்கிறோம்.

அது மட்டுமல்ல, பதவிகளில் கூட எந்த அளவுக்குப் பதவிகளின் எண்ணிக்கைகள் உயர்ந்து இருக்கின்றன என்பதையும் நாம் பார்ப்பது அவசியம்.

எஸ்.பி. பதவி 1966-67-ல் 29-ஆக இருந்தது. இன்று 63 பதவி களாக ஆக்கப்பட்டு இருக்கிறது.

டி.எஸ்.பி. 146-ஆக இருந்தது. இன்று 174-ஆக உயர்ந்து இருக்கிறது.

இன்ஸ்பெக்டர்கள் 369 என்று இருந்தது, இன்று 597 என்கிற அளவுக்கு உயர்ந்து இருக்கிறது.

எஸ்.ஐ. 1,545 ஆக இருந்தது. இன்று 1,904 ஆக உயர்ந்து இருக்கிறது.

ஏ.எஸ்.ஐ. 118 ஆக இருந்தவர்கள், 527 பேராக இன்றைக்கு, அந்த அளவுக்குப் பதவிகள் உயர்ந்து இருக்கின்றன.

போலீஸ் கான்ஸ்டேபிள்கள் 28,891 பேர் இருந்தார்கள், இன்று 36,642 பேர்.

ஆகவே, இந்தத் துறையிலே டெக்னிகல் லைன் என்ற அளவில் பணியாற்றும் 3,000 பேர் நீங்கலாக 1966-67-ல் 35,617 பேராக இருந்த இந்தத் துறை, இன்றைக்கு 1974-ல் 45,691 பேர் என்கிற அளவுக்கு வளர்ந்து இருக்கிறது.

இந்த அரசின் சார்பில் நாம் தொடங்கிய குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலமாக இந்தத் துறையிலே உள்ளவர்கள் எந்த அளவுக்குப் பயன் அடைந்து இருக்கிறார்கள் என்பதையும் மன்ற உறுப்பினர்கள் மறந்து விடக் கூடாது. அரசு அலுவலாளர்கள் பணியில் இருக்கும்போது மறைந்து விடுவார்களானால் இயற்கை எய்திவிடுவார்களானால், அவர்களுடைய குடும்பங்களுக்கு அரசின் சார்பில் 10,000 ரூபாய் நிதி உதவி அளிப்பது என்று அறிவிக்கப் பட்ட திட்டத்தின் கீழ் சென்ற ஆண்டு கிட்டத்தட்ட 1,000 அரசு அலுவலாளர்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 10,000 ரூபாய் நாம் நிதி உதவி செய்து இருக்கிறோம். அந்த குடும்பங்களின் பாதுகாப் பிற்காக, அந்த 1,000 பேரில் காவல் துறையினர் 208 பேர் என்பதை தான் இங்கே தெரிவிப்பேன். இந்தச் திட்டம் அறிவிக்கப்படு வதற்கு முன்பு, அவர்களில் ஒவ்வொரு ஆண்டும் 200 பேர் 300 பேர் இறந்து விட்டிருக்கிறார்கள் என்றாலும் அப்போதெல்லாம் அந்தக் குடும்பங்கள் திக்குத் தெரியாமல்தான் நின்று கொண்டு இருந்தன. ஆனால், இந்தத் திட்டத்தின்கீழ் காவல் துறையிலே உள்ள குடும்பத்தினர் மட்டுமே 208 குடும்பத்தினர் சென்ற ஆண்டு

பயனடைந்திருக்கிறார்கள் அந்த ஊழியர்கள் மறைவிற்குப் பிறகு என்ற செய்தியை இந்த அவைக்குத் தெரிவிப்பதும் என்னுடைய கடமையாகும். நான் இந்தத்துறை பொறுப்பேற்றுக் கொண்டதும் போலீசாரின் நலன்கள், போலீசார் மேலும் தீவிரமான பணியாற்றுவதற்காக இந்தத் துறைக்கென தனியாக ஒரு 'போலீஸ் கமிஷன்' அமைக்கப்பட்டு, அது 133 சிபார்சுகளை அரசுக்கு செய்தது. அந்த 133 சிபார்சுகளில் 116 சிபார்சுகளை அரசு ஏற்றுக்கொண்டது. அவற்றில் இப்போது 41 சிபார்சுகள் நிறைவேற்றப்பட்டு விட்டன. மற்ற சிபார்சுகளும் படிப்படியாக நிறைவேற்றப்படும் என்பதை நான் அறிவிக்கிறேன்.

எல்லா சிபார்சுகளுக்கும் ஆகும் தொடர் செலவு ரூ. 2 கோடியே 81 லட்சம். தொடரா செலவு 6 கோடி என்கிற அளவுக்கு இருக்கும் இப்போது ஏற்றுக்கொண்டு இருக்கிற 41 சிபார்சுகளுக்கும் ஆகிற தொடர் செலவு 93 லட்சத்து 67 ஆயிரம் ரூபாய். தொடராச் செலவு ரூ. 18 லட்சத்து 5 ஆயிரம் என்பதையும் நான் இங்கே கூறிக்கொள்கிறேன்.

காவலர்களுக்கு தினப்படி, அவர்களின் உணவுப்படி இவைகளெல்லாம் ஏதோ ஹைதர் காலத்தில் இருந்ததைப் போல் இருக்கிறது என்று நண்பர் செழியனோ யாரோ சொன்னதாக நினைவு. அப்படி ஒன்றும் இல்லை. அவர்களுக்கு அந்தப்படிகள் எல்லாம் உயர்த்திக் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. தினப்படி காவலர்களுக்கு 1.75 ஆக இருந்தது. இப்போது 3 ரூபாயாக உயர்த்தப்பட்டு இருக்கிறது. அதைப்போலவே பாதுகாப்பிற்காக செல்கிற இடங்களில் உணவு செலவிற்காக அவர்களுக்கு 2 ரூ. 2.25 என்று முன்பு வழங்கப்பட்டது இப்போது ரூ. 4.50 காசு என்கிற அளவுக்கு உயர்த்தப்பட்டு இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வீட்டு வாடகைப் படியைப் பொறுத்தவரையில் கூட அவர்களுக்கு போதுமானதாக இல்லை என்ற குறைபாட்டை ஆளும் கட்சி சார்பில் பேசிய ஒரு நண்பர் இங்கே குறிப்பிட்டார்கள். வீட்டு வாடகைப்படி நகர்புறத்தில் இருக்கிறபோது, இன்ஸ்பெக்டருக்கு 80 ரூ. என்றும், வெளியூர் சென்றால் இல்லை. இது 1970-க்கு முன்பு இருந்த நிலைமை. இப்போது ஒரு இன்ஸ்பெக்டர் நகர்ப்புறத்தில் இருந்தால் வீட்டு வாடகைப்படி 1970-ல் 80 ரூ.க்கு பதிலாக 150 ரூ. வெளியூரில் இருந்தால் 100 ரூபாய் என்றும் உயர்த்தியிருக்கிறோம்.

எஸ்.ஐ.-க்கு நகர் புறத்தில் இருந்தால் முன்பு 60 ரூ. இப்போது நகர் புறத்தில் வீட்டு வாடகைப்படி 100 ரூ. வெளியூரில் இருந்தால் முன்பு எஸ்.ஐ.-க்கு 50 ரூ. இப்போது 80 ரூபாய் என்று உயர்த்தியிருக்கிறோம்.

தலைமைக் காவலர்களுக்கு நகர் புறத்தில் இருந்தால் முன்பு 20 ரூபாய். இப்போது 40 ரூபாய். வெளியூரில் இருந்தால் முன்பு 20 ரூபாய் இப்போது 30 ரூபாய் என்றும் மாற்றியிருக்கிறோம்.

(பிற்பகல் 1-00)

புதிதாக ஏற்படுத்திய முதல் நிலை காவலர்களுக்கு வீட்டு வாடகைப்படி நகர் புறத்தில் இருந்தால் 40 ரூபாய் என்றும் வெளியூர்களில் இருந்தால் 30 ரூபாய் என்றும் அளித்து, இரண்டாம் நிலை காவலர்களுக்கு நகர் புறமாக இருந்தால் 14 ரூபாய், வெளியூரில் இருந்தாலும் 14 ரூபாய் என்று இருந்தது. அதை இப்போது நாம் நகர் புறத்தில் இருந்தால் 30 ரூபாய் என்றும், வெளியூர்களில் இருந்தால் 25 ரூபாய் என்றும் மாற்றி யமைத்திருக்கிறோம்.

ஆக, இந்த வகையிலேயெல்லாம் அவர்களுடைய கஷ்டங்களுக் கேற்ற வகையில் நம்முடைய அரசு நிதி ஆதாரத்தையும் மனதில் வைத்துக்கொண்டு முடிந்த அளவிற்கு உதவிகளைச் செய்த கார ணத்தினாலும், நவீன கருவிகளை அவர்களுக்கு வாங்கித் தருகிற காரணத்தினாலும் காவல் துறைக்கு 13 கோடி ரூபாயாக இருந்த செலவு இன்றைக்கு 25 கோடியைத் தாண்டியிருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆண்டுதோறும் காவலர் களை ஊக்கப்படுத்த, உற்சாகப்படுத்த, அவர்களுடைய வீரச் செயல்களைப் பாராட்ட அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15-ம் நாள் அன்று முதலமைச்சர் வழங்குகிற பதக்கங்கள் என்ற வகையில் விழா ஏற்பாடு செய்யப்பட்டு, வெறும் பதக்கங்கள் வழங்குவது மாத்திரமல்லாமல், சிறப்புப் பணி புரிந்த காவலர் களாக இருந்தால் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆயிரம் ரூபாயும், சப்-இன்ஸ்பெக்டர்கள், இன்ஸ்பெக்டர்களுக்கு இரண்டாயிரம் ரூபாயும், காவல் துறை டெபுடி சூப்பிரண்டுகளுக்கு 3 ஆயிரம் ரூபாயும், வீரச் செயல்கள் புரிந்தவர்களாக இருந்தால் அவர்கள் எந்தப் பதவியில் இருந்தாலும் 3 ஆயிரம் ரூபாயும் அண்ணா பிறந்த நாளன்று, செப்டம்பர் 15-ம் தேதியன்று பதக்கத்தோடு அவர் களுக்கு வழங்கப்படுகிறது.

இந்த வகையில் 1969-லிருந்து 1974 வரையில் 23 பேர் வீரப் பதக்கம் பெற்றிருக்கிறார்கள். 129 பேர் சிறப்புப் பதக்கம் பெற்றிருக்கிறார்கள். டி.எஸ்.பி.யோடு நின்று விடுகிறது இந்தப் பதக்கங்கள்.

எஸ்.பி.- களுக்கும் இது வேண்டுமென்ற முறையீடும் இருந்து வருகிறது. எஸ்.பி.- களுக்குப் பதக்கம் மாத்திரம் அளிக்கப்படும் பண முடிப்பு அளிக்கப்பட மாட்டாது என்பதையும் வருகிற ஆண்டிலிருந்து எஸ்.பி.- களுக்கும் வீரப் பதக்கம் அல்லது சிறப்புப் பதக்கம்—இவைகள் அளிக்கப்படும் என்பதை நான் இந்த அவையில் அறிவிக்கிறேன்.

நம்முடைய நண்பர் திரு. செழியன் பேசும்போதும் வேறு சில நண்பர்கள் பேசுகிற நேரத்திலும், இந்த போலீசார் எந்த வழக்கையும் கண்டுபிடிக்கவில்லை, எந்த குற்றத்தையும் கண்டுபிடிக்கவில்லை, என்ன செய்கிறது இந்தப் போலீஸ்? என்றெல்லாம் மிகுந்த ஆத்திரத்தோடு கேட்டார்கள். நான் சில விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசு வெளியிடுகிற கவர்ன்மெண்ட் ஆஃப் இந்தியா தரப்பில் வெளியிடுகிற 'கிரைம்ஸ்' இன் இண்டியா புத்தகம் 1970 ஆம் ஆண்டு வரையில் வெளியிடப்பட்டதில் இருந்து சில குறிப்புக்களை சென்ற ஆண்டு இந்த அவையில் எடுத்துக் காட்டினேன்.

அதற்கடுத்து அவர்கள் வெளியிட்டிருக்கிற புத்தகம் 'கிரைம்ஸ் இன் இண்டியா' என்பது 1971 ஆம் ஆண்டு புள்ளி விவரங்கள் ஆகும். அதுதான் இதுவரையில் நம் கைக்குக் கிடைத்திருக்கிறது. மற்ற ஆண்டுகளுக்கான அந்தப் புத்தகம் இன்னும் வரவில்லை. கடைசியாக அவர்கள் வெளியிட்ட புத்தகத்திலிருக்கிற ஆதாரங்களை வைத்துப் பார்த்தால் உண்மை தெரியும்.

உத்திரப் பிரதேசத்தில் பதிவான குற்றங்கள் 2,36,328. விசாரணையில் தண்டிக்கப்பட்ட சதவீதம் 55.38.

மராட்டியத்தில் 99,125 குற்றங்கள் பதிவானவை, தண்டிக்கப்பட்ட சதவீதம் 66.04.

பீஹாரில் 83,270 குற்றங்கள் பதிவானவை, இதில் தண்டிக்கப்பட்ட சதவீதம் 40.04.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1975 ஏப்ரல் 3] [டாக்டர் மு. கருணாநிதி]

மேற்கு வங்கத்தில் 78,546 குற்றங்கள் பதிவானவை, இதிலே தண்டிக்கப்பட்ட சதவீதம் 56.63 சதவீதம்.

இராஜஸ்தானிலே 36,743 குற்றங்கள் பதிவானவை, தண்டிக்கப்பட்ட சதவீதம் 52.93.

குஜராத்திலே 32,747 குற்றங்கள் பதிவானவை, இதிலே தண்டிக்கப்பட்ட சதவீதம் 52.81.

பஞ்சாபிலே 11,433 குற்றங்கள் பதிவானவை, தண்டிக்கப்பட்ட சதவீதம் 54.03.

மைசூரிலே 36,557 குற்றங்கள் பதிவானவை, தண்டிக்கப்பட்ட சதவீதம் 54.03.

கேரளாவிலே 29,712 குற்றங்கள் பதிவானவை, தண்டிக்கப்பட்ட சதவீதம் 37.15 ஆகும்.

ஆந்திராவில் மொத்த குற்றங்கள் பதிவானவை 46,390, தண்டிக்கப்பட்ட சதவீதம் 82.08.

தமிழ்நாட்டில் 59,616 குற்றங்கள் பதிவானவை. இதிலே தண்டிக்கப்பட்ட சதவீதம் 82.08.

ஆக, இந்த இரண்டு மாநிலங்களில்தான் தமிழ்நாட்டிலும், ஆந்திராவிலும்தான் குற்றங்கள் விசாரணைக்குப் பிறகு அதிக சதவிகிதம் தண்டிக்கப்பட்டிருக்கின்றனர். என்ன செய்கிறார்கள் போலீசார் என்று திரு. செழியன் அவர்கள் கேட்டார்களே; இதைத்தான் அவர்கள் செய்கிறார்கள் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன்.

திரு. கோவை செழியன்: தலைவரவர்களே, நான் நம்முடைய தமிழகப் போலீசின் திறமையை என்றைக்கும் குறை சொல்லவில்லை. இங்கே அரசியல் சம்பந்தமாக, என் மாதிரி அரசியல்வாதிகள் சொல்கிற குற்றச்சாட்டுகள் இன்னமும் இந்த மாதிரியான குற்றங்கள் கண்டு பிடிக்கப்படவில்லை என்பதுதான். உதாரணத்திற்குச் சொல்கிறேன். என் வீட்டில் 4 ஆயிரம் ரூபாய் பெறுமான பொருள் திருடு போய் விட்டது. அது இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. வெங்கா விவகாரம், சுகுமாரன் கொலை போன்றவைகளில் குற்றவாளிகளை ஏன் கண்டு பிடிக்கவில்லையென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** தலைவரவர்களே, அவர் வீட்டுக்கு யார் யார் வந்தார்கள் என்று யோசனை செய்து பார்த்துச் சொல்லட்டும்.

**திரு. கோவை செழியன்:** திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் போன வாரம் வந்தார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, நான் மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகிற நேரத்தில் மத்திய அரசினுடைய அந்த ஆண்டு அறிக்கையைத்தான் படித்தேன். நம்முடைய மாநிலத்தில் எவ்வளவு குற்றங்கள் பதிவாகியிருக்கின்றன, எந்த அளவிற்குத் தண்டிக்கப்பட்டார்கள் என்ற இந்த எண்ணிக்கை விவரங்கள் மத்திய அரசின் தகவல்தான். அதைத்தான் நான் படித்தேன். திரு. செழியன் கூறிய விவகாரங்களைப் பற்றி நான் பிறகுச் சொல்கிறேன். அவர்கள் 60 சதவிதம் வழக்குகளில் 51 சதவிதம் வழக்குகள் அரசியல் வழக்குகள் என்று எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் என்ன கணக்குப் போட்டுச் சொன்னார்கள் என்று தெரியாது. அவர் சொன்னதை விளக்குவதற்கு அவருக்கு நேரம் இருக்காது. அவர் தனியாக ஒரு நாள் சந்தித்து விளக்கினால் நானும் புரிந்துகொள்ள ஏதுவாக இருக்கும்.

இதைப் போலவே கொலை வழக்குகள் என்று எடுத்துக் கொண்டால்கூட பெரிய மாநிலமான உத்திரப் பிரதேசத்தில் 41 சதவிதம் தான் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். நான் ஏற்கெனவே சொன்ன மாநிலங்களின் பட்டியலைப் பார்த்தால், அவைகளைத் திரும்ப நான் படிக்க விரும்பவில்லை—தமிழ்நாட்டில் தான் 61 சதவிதம் கொலைக் குற்றங்களில் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற புள்ளி விவரத்தை இந்தப் புத்தகத்தில் நாம் காண முடியும்.

இதைப் போலவே கொள்ளை என்று எடுத்துக் கொண்டால், பெரிய மாநிலமான உத்திரப் பிரதேசத்தில் 1971 ஆம் ஆண்டு பதிவான குற்றங்கள் 6,004. இதிலே 34 சதவிதம் தான் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பீஹாரில் 2,015 கொள்ளை குற்றங்கள் பதிவானவை. இதிலே தண்டிக்கப்பட்டவர்கள் 44 சதவிதம்.

1975 ஏப்ரல் 3] [டாக்டர் மு. கருணாநிதி]

ஆனால் தமிழ்நாட்டில் கொள்ளை என்ற வகையில் பதிவான குற்றங்கள் 22. இதிலே 57 சதவிதம் பேர்கள் தண்டிக்கப் பட்டிருக்கிறார்கள்.

வழிப்பறி என்று எடுத்துக் கொண்டால், உத்திரப் பிரதேசத்தில் பதிவான குற்றங்கள் 10,049, இதிலே 48 சதவிதம் தண்டிக்கப் பட்டிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் பதிவான குற்றங்கள் 124, இதிலே 68.54 சத விதம் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.

தீண்டாமை ஒழிப்புச் சட்ட குற்றங்களைப் பற்றி இங்கு சில உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். திரு. கே. டி. கே. அவர்களும் இதுபற்றி எடுத்துச் சொன்னார்கள். தீண்டாமை ஒழிப்புக் குற்றங்கள் எவ்வளவு கடுமையாகப் பாவிக்க வேண்டும் என்பதில் இந்த அரசு எப்போதும் பின் வாங்காது என்பதை நான் அடிக்கடி எடுத்துக் காட்டியிருக்கிறேன்.

1967 ஆம் ஆண்டு 134 குற்றங்கள் பதிவாகி அதிலே கோர்ட்டில் 129 குற்றங்கள் தாக்கல் செய்யப்பட்டு 94 குற்றங்கள் தான் தண்டிக்கப்பட்டிருக்கின்றன.

1968-ல் 37 குற்றங்கள் பதிவாகி, 37 கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டு, 19 குற்றங்கள் தான் தண்டிக்கப்பட்டன.

1972, 1973, 1974 ஆகிய இந்த 3 ஆண்டுகளை கணக்குப் பார்த் தால் 1972 இல் பதிவான குற்றங்கள் 882, இதிலே கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டது 872, இதிலே தண்டிக்கப்பட்டது 590.

1973 இல் 1,633 குற்றங்கள் பதிவாகி, 1,628 குற்றங்கள் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டு. 1,117 குற்றங்கள் தண்டிக்கப் பட்டன.

1974 இல் 954 பதிவாகி, 911 கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டு, 516 இதிலே தண்டிக்கப்பட்டிருக்கின்றன.

மேலும் கடுமையாக இதிலே இருக்க வேண்டுமென்று போலீசார் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆணையிடப் பட்டிருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த அவைக்குத் தெரிவிப்பேன்.

சில முக்கிய வழக்குகளில் நம்முடைய காவலர்கள் எவ்வளவு திறமையைக் காட்டியிருக்கிறார்கள் என்பதையெல்லாம் திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் நம் நண்பர் சுப்பிரமணியம் அவர்களும் இங்கே பேசிய வேறு சிலரும் அவர்களே சென்று போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கிற கண் காட்சியைப் பார்வையிட்டோம், அது ஒரு கோணம், இன்னொரு கோணம் இருக்கிறது என்று வாதிட்டார்கள். அவர்களுடைய வாதத்தை நான் மறுக்கவில்லை. பொதுவாகவே போலீஸ் அதிகாரிகள் 45 ஆயிரம் பேரில் அத்தனை பேருமே நல்லவர்கள் என்று வாதிடுவதற்கு நான் எழுந்து நிற்கவில்லை. ஆங்காங்கு சில குறைபாடுகள் இருக்கின்றன.

ஆளும் கட்சியின் சார்பில் பேசியவர்களும் எடுத்துச் சொன்னார்கள். தோழமைக் கட்சியின் சார்பில் பேசியவர்களும் எடுத்துச் சொன்னார்கள். எதிர்க்கட்சியின் சார்பில் பேசியவர் களும் எடுத்துச் சொன்னார்கள். ஆகவே போலீசார் ஒரு தலைப் பட்சமாக இருக்கிறார்கள் என்பதற்கு இடமில்லாத வகையில் இந்த மன்றத்திலே இருக்கின்ற ஆளும் கட்சி, எதிர்க் கட்சி, தோழமைக் கட்சி அத்தனை பேருமே அவரவருக்குள்ள குறை பாடுகளை, அவர்களுடையப் பகுதியில் நடைபெற்ற சம்பவங்களை எடுத்துக் கூறியதிலிருந்து, போலீசார் ஆளும் கட்சிக்குத் தான் சார்புடையவர்களாக இருக்கிறார்கள் என்ற அந்த வாதம் அடி பட்டுப் போகிறது என்பதை மாத்திரம் நான் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

இதையெல்லாம் மீறி, காவல் துறையில் இருக்கிற நல்ல திறமை யாளர்கள், விஷ ஊசிக் கொலை வழக்கு போன்ற வழக்குகளை எந்த அளவுக்குக் கண்டு பிடித்தார்கள் என்பதையும், அதை இன்றைக்கு அனைத்து இந்தியாவில் இருக்கின்ற அனைவரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும், என் உடனடியாக ஒவ்வொரு வழக்கையும் கண்டுபிடிக்கவில்லை என்று வாதிடுகின்றவர் களுக்கு பதிலாக சொல்ல விரும்புகிறேன். 19—12—1970-ல் ஒருவர் இறந்தார், இந்த விஷ ஊசி சம்பந்தமாக, அதற்குப் பிறகு மார்ச் 1971-ல் இன்னொருவர் இறந்தார். பிறகு 1971 ஜூன் மாதத்தில் இன்னொருவர் இறந்தார். பிறகு 9—10—1971-ல் இன்னொருவர் இறந்தார். பிறகு 7—1—1972-ல்

இன்னொருவர் இறந்தார். 24—6—1972-ல் இன்னொருவர் இறந்தார். கடைசியாக 26—10—1972-லே இறந்து போன கீழக்கரையைச் சேர்ந்த தைக்கா தம்பியின் மாமனார், சென்னை எழும்பூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் தான் புலன் விசாரணையே ஆரம்பமாகியது. ஆக, 1970-ல் நடைபெற்ற கொலை சம்பவங்கள், 1972 வரையில் புலன் விசாரணைக்கு ஆளாகாமல் அவ்வளவு மர்மமாக நடைபெற்றது. ஆயினும், நம் திறமை மிக்க காவல் துறையினர் இந்தக் கொலையைக் கண்டுபிடித்து, கொலையில் ஈடு பட்டவர்களுக் கெல்லாம் தண்டனையை வாங்கித் தந்திருப்பதை நான் மீண்டும் மீண்டும் இந்த அவைக்கு ஞாபகப்படுத்த வேண்டிய அவசியமில்லை. இதை எதிர்க்கட்சி உறுப்பினர்கள்கூடப் பாராட்டியிருக்கிறார்கள். ஆகவே நான் அதை மீண்டும் இங்கே விளக்க விரும்பவில்லை.

அதைப்போலவே நீங்கள் கமிஷனர் அலுவலகத்திற்குச் சென்ற போது டெலிவிஷனில் ஒன்றைப் பார்த்திருக்கலாம். அதிலே ஒரு தனவந்தரை எப்படிக் கொன்று எந்தப் பொருளும் இல்லாமல் ஏமாந்தார்கள் அந்தத் திருடர்கள் என்பதையும் அவர்கள் எவ்வளவு இளம் வயது உடையவர்கள் என்பதையெல்லாம் பார்க்கும்போது, இந்தச் சமுதாயத்தில் அப்படிப்பட்டவர்களை யெல்லாம் திருத்துவதற்கு எவ்வளவு பெரிய பிரச்சாரம் தேவைப் படுகிறது என்பதைத் தான் நாமெல்லாம் மிகுந்த வேதனையோடு எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கிறது.

சமுதாயத்திலிருக்கிற பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் தான் இப்படிப்பட்டக் காரியங்களுக்குக் காரணமாக ஆகின்றன என்பதை நான் மறக்கவில்லை. ஆனால், அதே நேரத்தில் அவை களுக்கு இது தான் மார்க்கமா என்கின்ற அந்தக் கேள்விக்கும் நாம் விடை கண்டாக வேண்டும். மிகச் சாதாரண வாலிபர்கள், சின்னஞ் சிறியவர்கள், அவர்கள் எப்படி அந்தக் கொலையைச் செய்தார்கள் என்பதைக் கமிஷனர் அலுவலகத்தில் மறுபடியும் காட்சியாக ஆக்கிக் காட்டியிருக்கிறார்கள். அதை டெலிவிஷனில் கமிஷனர் அலுவலகத்தில் நான் சென்று பார்த்தேன், எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் பார்த்திருப்பார்கள் என்று நம்புகிறேன். அந்த வழக்கை மிகத் திறமையாக நம் காவல்துறையினர் கண்டுபிடித் திருக்கிறார்கள்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1975 ஏப்ரல் 3

அதைப் போலவே ஒரு அகில உலக ஏமாற்றுக்காரன்—பாஸ்போர்ட்டை வைத்துக்கொண்டு ஏமாற்றியவன் ஜெர்ரி லாய்டு என்பவன் சென்னையில் உள்ள ஒரு ஓட்டலில் தங்கி, தொடர்ந்து இந்த ஏமாற்று வேலையைச் செய்து கொண்டிருந்தான். நம்முடைய காவல்துறையினரால் பிடிக்கப்பட்டு, அவன்மீது வழக்கு தொடரப்பட்டிருப்பதை அனைவரும் அறிவோம்.

முத்திரைத் தாள் வழக்கு என்ற வழக்கில் திறமையாக முத்திரைத் தாளை அச்சிட்டு, விற்பனை செய்து கொண்டிருந்தவர்களை நம் காவல்துறையினர் அவர்களுக்குக் கிடைத்த தகவலின் பேரில் சென்னை நகரிலுள்ள அண்ணா நகரில் உள்ள ஒரு பங்களாவை சோதனை செய்ததில் இந்தக் கள்ள வில்லைகளெல்லாம் கண்டுபிடிக்கப்பட்டு, 15 பேருக்கு மேல் கைது செய்யப்பட்டு, ரூபாய் 1,17,165 மதிப்புள்ள நீதிமன்ற 5 ரூபாய் கள்ள வில்லைகளும், 1 ரூபாய் கள்ள வில்லைகளும் கைப்பற்றப் பட்டிருக்கின்றன. வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது நம்முடைய காவல்துறை திறமைக்கு ஒரு சான்றாகும்.

அதைப் போலவே இன்னொரு கொள்ளை. கடந்த 4, 5 ஆண்டு காலத்தில் சென்னை மாநகரத்தில் 5-ஆயிரம் ரூபாய் களவு போய் விட்டது, 10-ஆயிரம் ரூபாய் காணாமல் போய்விட்டது என்றெல்லாம் செய்தி வந்து கொண்டிருந்தது. இப்பொழுது செழியன் கூட 4-ஆயிரம் ரூபாய் வீட்டிலே காணாமல் போய் விட்டது என்று சொன்னார். அதைப் பற்றி விசாரிக்க வேண்டும்.

**திரு. கோவை செழியன்:** 4-ஆயிரம் ரூபாய் பெறுமான பாத்திரங்கள் திருட்டுப் போய் விட்டது என்று ஏற்கனவே நான் போலீசுக்கு ரிப்போர்ட் செய்திருக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** செழியன் போலீசுக்கு ரிப்போர்ட் செய்கின்ற நேரத்தில் எல்லாம் அது கவனிக்கப் படுகிறது. ஒரு முறை அவர் ஏதோ பயங்கரமான டெலிபோன்கள் எல்லாம் வருவதாகச் சொன்னவுடன் அவருடைய வீட்டைச் சுற்றி போலீஸ் காவலே போடப்பட்டிருந்தது. அவருக்கே தெரியும். ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை அவர் வீட்டைச் சுற்றி போலீஸ் ஜீப் ரோந்து போய் கொண்டிருந்தது. ஆகவே செழியன் அல்ல, யார் தனக்கு ஆபத்து என்று எந்த எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்தாலும், ஆளும் கட்சி, தோழமைக் கட்சி உறுப்பினர் யாராக இருந்தாலும் சரி, அப்படிப்பட்ட அறிவிப்பு

1975 ஏப்ரல் 3] [டாக்டர் மு. கருணாநிதி]

கள் வருமானால் உடனடியாக அது கவனிக்கப்படுகிறது. செழியன் அவர்கள் தனக்கு டெலிபோன் மூலம் ஆபத்து என்ற அறிவிப்பு வருகிறது என்ற சொன்னவுடன், 2 காவலர்கள் போடப்பட்டார்கள். 2, 3 நாள் வரையில் அவர் விட்டிற்கு முன்னால் காவல் இருந்தது. அவர் வீட்டைச் சுற்றி ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை ஒரு ஜீப் ரோந்து சுற்றிக் கொண்டிருந்தது. ஆகவே, தகுந்தப் பாதுகாப்பு அனைவருக்கும் அளிக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனந்தநாயகி அம்மையாருக்குக் கூட.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** அனந்தநாயகி அம்மையாருக்கு . . . இப்படி தொடர்கதை தான்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பழைய கதை; அப்போதே முடிந்துவிட்டது. புதிய தொடர்கதை என்று நீங்கள் ஆரம்பிக்கப் போகிறீர்கள் . . .

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** அனந்தநாயகி, செழியன் இப்படி எல்லோருக்கும் நடந்தது. தொடர்கதை என்று சொன்னேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இப்படி ரூ. 5 ஆயிரம் காணமல் போய்விட்டது, ரூ. 10 ஆயிரம் காணமல் போய்விட்டது என்ற தகவல் வந்தது. நான்கைந்து ஆண்டு காலமாக சென்னை நகரில் திருட்டைப் பற்றி தகவல் வந்துகொண்டே இருந்தது. அதை நம்முடைய காவல் துறையினர் ஒரு அறைகூவலாக ஏற்றுக் கொண்டார்கள். இறுதியாக நகரத்திலுள்ள கிரீன்வேஸ் சாலைக்கு அருகாமையில் உள்ள ஒரு இல்லத்தில் நடைபெற்ற ஒரு களவின் தொடர்பாக நம்முடைய போலீசார் 2 பேரை சென்னையிலுள்ள ஒரு விடுதியில் கைது செய்தார்கள். அந்த 2 பேரும் கல்கத்தாவைச் சேர்ந்த வாலிபர்கள். அவர்களிடத்தில் 75 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள பொருள்களும் அதற்கு முன்பு களவாடப்பட்ட நகைகளும் இருந்தன. அவைகள் மீட்கப் பட்டன. அந்தக் கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் பிடிபட்டதன் மூலம் இதுவரையில் 2½ லட்சம் மதிப் புள்ள பொருள்கள் கைப்பற்றப் பட்டிருக்கின்றன. இங்கிருந்து நம் காவல் துறையினர் கல்கத்தா சென்று, அங்கே நம்

அதிகாரிகள் மாறு வேடத்தில் அலைந்து திரிந்து, அந்தக் குற்ற வாளிகளை யெல்லாம் கண்டுபிடித்து மிகத் திறமையோடு இந்தப் பணியைச் செய்து முடித்திருக்கிறார்கள்.

இன்னொன்று, நண்பர் செழியன் குறிப்பிட்டார். சிலை காணமல் போன விஷயம், தஞ்சையில். அது சிவபுரம் சிலையா என்று கேட்டேன். அவர் விவரம் தரவில்லை. நான் விவரத்தை தெரிந்து கொண்டேன். சிவபுரம் சிலை காணமல் போனது நீண்ட நாளைக்கு முன்பு. அதனுடைய விவரங்கள் வேண்டுமானல் மறுபடியும் வருகிற நேரத்தில் சொல்லுகிறேன். இந்தச் சிலையைப் பொறுத்த வரையில் தாமஸ் நாடார் . . .

**திரு. கே. டி. கே. தங்கமணி:** கல்கத்தா சென்று கண்டு பிடித்ததாகச் சொன்னார்கள். அப்படிக் கண்டுபிடிப்பதற்கு முதலில் யாரோ--எஸ்.ஐ.-யோ யாரோ—ஒரு அதிகாரி கண்டு பிடித்திருக்க வேண்டும். அதற்கு முக்கியமான பொறுப்பாக இருந்தவர், முதலில் கண்டு பிடித்தவர் அந்த அதிகாரி யார் என்று தெரியுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அந்த அதிகாரியின் பெயர் எனக்குத் தெரியவில்லை. ஆனால் அந்த அதிகாரியின் பெயரை அண்ணா பதக்கம் வழங்கப்படுகின்ற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் கே. டி. கே. தங்கமணி கூறியதை நினைவில் வைத்துக் கொள்வோம் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாமஸ் நாடார் என்பவரைப் பற்றிச் சொன்னார். இந்த சிலை வழக்கில் 2, 3 முறை அவர் ஈடுபடுத்தப்பட்டு, விடுதலையும் ஆகி யிருக்கிறார். இப்பொழுது தஞ்சைப் பெரிய கோவிலில் இருந்து பிரதோஷ நாயகர் சிலைத் திருட்டுச் சம்பந்தமாகக் குற்ற எண். 766/73-ல் தஞ்சாவூரில் பதிவு செய்யப்பட்டு, தஞ்சை காவல் துறையினரின் விசாரணையில் அது இருந்தது. அந்த விசாரணையில் புலன் ஏதும் கிடைக்கவில்லை. பிறகு அரசு இந்த வழக்கை சி.ஐ.டி. போலீசார் மூலம் விசாரிக்க வேண்டுமென்று கேட்டு, ஐ.ஜி. அவர்களுடைய உத்திரவின் பேரில் தமிழ் நாடு குற்றப் புலனாய்வுத் துறையினர், பெரிய கோவிலில் நடந்த பிரதோஷ நாயகர் சிலைத் திருட்டு வழக்கு விசாரணையை 3—1—1975 நாள் அன்று மேற்கொண்டார்கள். விசாரணையை சிறப்பாகச் செய்த குற்றப் புலனாய்வுத் துறையினர் துரைசாமி

1975 எப்ரல் 3]

என்கின்ற சப்போய்மாஸ்டர்-ஐ 24—2—1975 அன்றும், அவருக்குத் துணையாக இருந்த சேலத்தைச் சேர்ந்த ராமகிருஷ்ணன் என்பவரை 20—3—1975 அன்றும் கைது செய்தார்கள். துரைசாமி, மற்றும் ராமகிருஷ்ணன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் அம்மாப்பேட்டை காவல் நிலைய குற்ற எண். 70/75-ஆக 25—2—1975 அன்று பதிவு செய்து, அது சம்பந்தப்பட்ட கம்பயர் நத்தம் பெருமாள்கோவில் செல்வர் சிலையைக் கைப்பற்றினர்கள் மேலத் தஞ்சை காவல் நிலைய குற்ற எண். 459/73-ஐ 30—3—1975 அன்று பதிவு செய்து, அது சம்பந்தப்பட்ட தீபநாச்சியார் சிலையை —சுமார் 10 ஆயிரம் மதிப்புள்ளது—அதனைக் கைப்பற்றினர்கள். இவ்விருவர் வாக்குமூலத்தின் பேரில் கூகூர் சிவன் கோவிலில் இருந்த ஒரு சிலை களவாடியதாகக் கிடைத்த புலன் பேரில் நாச்சியார்கோவில் காவல் நிலைய குற்ற எண். 89/75 ஆக 8—3—1975-ம் தேதி பதிவுச் செய்யப்பட்டு, அதில் சம்பந்தப்பட்ட சில எதிரிகள் தாமஸ் நாடாருக்கு விற்றதாக தகவல் கூற, அதன் பேரில் தாமஸ் நாடார் 8—3—1975-லிருந்து தேடப்பட்டு வருகிருர். அவர் தலைமறைவாக இருக்கிருர். அவரைக் கண்டுபிடித்து சிலையைக் கைப்பற்ற மேல் நடவடிக்கை எடுக்க முயற்சி நடைபெறுகிறது. மேற்கொண்டு தகவல்கள் இருக்குமானல்—நம்முடைய செழியன் தவருக எடுத்துக்கொள்ளாமல் அவர் எங்கேயிருக்கிருர் என்ற தகவலைச் சொல்லுவார்களானல் உதவியாக இருக்கும்—தாமஸ் நாடாரை நான் கூடப் பார்த்திருக்கிறேன். பார்த்தவுடனே அடையாளம் தெரிந்து விடும்—ஆகவே செழியன் மாத்திரமல்ல, யார் வேண்டுமானலும் அவரைப் பார்த்தவுடன் அவர் இன்ன இடத்தில் இருக்கிருர் என்று போலீசுக்குத் தகவல் தந்து உதவி செய்வார்களானல், நன்ருக இருக்கும்.

**திரு. கோவை செழியன்:** தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வதைப் பார்த்தால், தாமஸ் நாடாரைப் பற்றிய விவரங்களை எல்லாம் நான் தெரிந்து வைத்திருப்பதைப்போலவும், அவர் எங்கே இருக்கிருர் என்பதை நான் தெரிந்து வைத்திருப்பதைப் போலவும் சொல்கிருர்கள். என்னைப் போன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசும்போது பல கருத்துக்களை ஆதாரமாகக் காட்டுகிறேம். எங்களுக்குப் பல ஆதாரங்களைக் கொடுக்கிருர்கள். அதை வைத்துப் பேசுகிறேம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவரைப் பார்த்திருக்கிருர்கள். நான் பார்த்தது கூடக் கிடையாது. மைலாப்பூர்

ஓட்டலில் அவரும் மற்றும் சில பெரிய மனிதர்களும் தங்கியிருந்தார்கள். அவர்கள் தங்கியிருந்த அறைக்குப் பக்கத்தில் டெல்லியிலிருந்து வந்த சி.பி.ஐ. டிப்பார்ட்மெண்டைச் சேர்ந்தவர்கள் 46 நாள் தங்கியிருந்து, இது சம்பந்தப்பட்ட விபரங்களைச் சேகரித்து இருக்கிறார்கள். அந்த டெல்லி அதிகாரிகள் தான் இந்தச் செய்தியை என்னிடம் சொன்னார்கள். யார், யார் தங்கினார்கள் என்று கேட்டால் அந்த விபரத்தைத் தர நான் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதனால்தான் சொல்கிறேன் செழியனுக்கு இவ்வளவு விபரம் தெரிந்திருக்கிறது. தன்னுடைய வீட்டுக்குப் போன் செய்கிறார்கள் என்று உடனடியாகப் போலீசுக்கு சொன்னச் செழியன் அவர்கள், இப்படி ஒரு சிலையைத் திருடிய ஆசாமி தலைமறைவாக இருக்கிறார் என்பது தெரிந்திருக்கும்போது அதைச் செழியன் கடமை உணர்வுடன் காவல் துறைக்கு போன் செய்திருந்தால் உதவிகரமாக இருந்திருக்கும் என்பதற்காகத்தான் நான் சொன்னேன்.

**திரு. கோவை செழியன்:** தயவுசெய்து இன்னும் அப்படிச் சொல்ல வேண்டாம். அது வேறு பக்கம் திருப்பி விட்டுவிடும். இது எப்போதோ நடந்தது. பல மாதங்களுக்கு முன்னால் நடைபெற்றது. அப்போது எனக்குத் தெரியாது. இந்த மானியத்தின் மீது பேசுவதற்காக 2, 3 நாட்களுக்கு முன்னால் செய்திச் சொன்னார்கள். அப்போதே தெரிந்திருந்தால், ஐ.ஜி. என்ன, கமிஷனர் என்ன, முதலமைச்சரிடமே சொல்லியிருப்பேன். அவர் முதலமைச்சர் மட்டுமல்ல ; என்னுடைய நண்பரும் கூட. அவரிடம் சொல்லி, இதைச் செய்யுங்கள் என்று கூடச் சொல்லியிருப்பேன். ஆனால் இந்தச் செய்தி 2, 3 நாட்களுக்கு முன்னால்தான் தெரிய வந்தது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இன்னும் அவர் என்னை நண்பராக வைத்துக் கொண்டிருப்பதற்காக நன்றி கூறிக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** பொதுவாக இந்த இரண்டு வருஷகாலமாக இந்த மன்றத்திலே பல சிலைகள் திருட்டுச் சம்பந்தமாகக் கேள்விகள் போடப்பட்டிருக்கின்றன. சிலை திருட்டைப் பார்க்கும்போது, சிலைகளைத் திருடி யாரோ கையில் வைத்துக் கொண்டிருப்பது மாதிரி செய்தி வருகிறது. அவர்கள்

1975 ஏப்ரல் 3] [டாக்டர் மு. கருணாநிதி]

தான் சிலைத் திருட்டுக்கு ஏற்பாடு செய்கிறவர்கள். அப்படியானால் அந்தத் திருட்டுக்கு உடந்தையாக இருந்தார்கள் என்பதோடு, "not only receivers of the property but also abettors".

என்ற முறையில் வந்தால் திருட்டுக் குறையும். அந்த மாதிரிப் போலீசார் செய்ய வேண்டுமென்று ஏதாவது தாக்கீது அனுப்பப் பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** சூழ்நிலையைப் பொறுத்து, சம்பவங்களைப் பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்னும் தீவிரமாக இதிலே போலீசார் இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. சிலைகள் வெளிநாடு களுக்குச் செல்வதைத் தடுக்கின்ற வகையில் வெளிநாடுகளுக்கு நம்முடைய தலைமை காவல்துறை அதிகாரி ஐ.ஜி. அவர்கள் இந்தியாவின் சார்பில் சென்றிருக்கிறார்கள். அவர்கள் இன்டர்போலில் அதன் துணைத் தலைவர்களில் ஒருவராகவும் இருக்கிறார்கள். இதுபற்றி அங்கே எடுத்துச் சொல்லப் பட்டிருக்கிறது. வெளிநாடுகளுக்கு இப்படிப்பட்ட சிலைகள் அதிகமாக ஏற்றுமதியாவதற்குக் காரணம், அங்கே கிராக்கி அதிகமாக இருக்கிறது. இந்தியாவில் இருந்தால் 5,000, 10,000 ரூபாய்தான் தரப்படும். ஆனால் வெளிநாடுகளுக்குச் செல்லும்போது லட்சக்கணக்கில், இதுபோன்ற தொன்மை வாய்ந்த சிலைகளுக்கு லட்சக்கணக்கில் மதிப்புண்டாகிறது. அதனால் இந்த அளவில் நடைபெறுகிறது. இன்டர்போலில் நம்முடைய ஐ.ஜி. அவர்கள் மிக விரிவாக எடுத்துச் சொல்லி வெளிநாடுகளுக்குக் கடத்தப்படுவதைத் தடுக்க நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சாதாரணமாகப் பல சாமான்களைத் திருடுகிறார்கள். திருடிக் கொண்டு போய் ஒரு இடத்தில் விற்கிறார்கள். திருட்டுச் சாமான்களை வாங்கியவர்கள், திருட்டுச் சாமான்கள் என்று தெரியாமல் வாங்கிவிட்டோம் என்று சொல்லி தப்பித்துக் கொள்கிறார்கள். அல்லது திருட்டுச் சாமான்கள் என்று சொல்லி கேஸ் போடலாம். இது இரண்டாவது முறை. திருடுகின்றவர்களுக்குச் சிலையின் மதிப்புத் தெரியாது. ஆனால் திருடுவதற்கு என்று ஒரு 'காங்க்' ஏற்பாடு செய்கிறார்கள். அதைக்கொண்டு, இப்படி ஏற்பாடு செய்பவர்கள் திருட்டுக்கு 'அபட்டராகிறார்' என்ற அந்த முறையில் அணுகினால் அவர்களைத்

தடுப்பதாக அமையுமே. அந்த முறையில் நடவடிக்கை எடுக்க போலீசாருக்கு ஏதாவது தாக்கீது அனுப்பப்பட்டிருக்கிறதா? போலீஸ் நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சிலைகளை, தொன்மை வாய்ந்தது என்பதற்காகத் திருடுகிறார்களா? இல்லை என்றால் கலை நுணுக்கம் அதிகம் உள்ளதால் திருடுகிறார்களா? இந்த இரண்டையும் பார்த்தால், கலை நுணுக்கம் அதிகம் என்பதால் திருடுகிறார்கள் என்றால், இப்படிப்பட்டச் சிலைகளை நம்முடைய சிற்பக் கூடங்களில் தயார் செய்து விற்கலாமே. அதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** கலை உணர்வுக்காகத் திருடவில்லை; விலை உயர்வுக்காகத் திருடுகிறார்கள். நாமே செய்து விற்கலாம் என்றால் வெளிநாட்டார் புதிய சிலைகளை வாங்கத் தயாராக இல்லை. இதைவிட அழகாக புதிய சிலைகளைச் செய்து கொடுத்தாலும் வாங்கத் தயாராக இல்லை. (திருமதி த. ந. அனந்த நாயகி--குறுக்கீடு). என்ன? எண்ணெய் தடவி விற்கலாமா? (சிரிப்பு). ஒரு வழக்கறிஞர் இப்படி யோசனை சொல்வது சரியல்ல. புதிய சிலைக்கு எண்ணெய் தடவி, கறுப்பாக்கி விற்கச் சொல்கிறார்கள். இது நல்ல யோசனை அல்ல. திருடி விற்கிறவர் களுக்கு வேண்டுமானால் இது பயன்படும் யோசனையாக இருக்கலாம்.

திரு. கே. டி. கே. அவர்கள் கேட்டபடி வேறு யாராவது அப்படித் திருடச் சொன்னாலும், அது நிருபிக்கப்படுமானால் அவர்கள் மீதும் வழக்கு போடப்படுகிறது. அதிலும் போலீசார் தீவிரமாக இருக்கிறார்கள். இன்னும் தீவிரமாக இருக்க வேண்டு மென்ற அடிப்படையில் நான் போலீசாரை அழைத்துப் பேசி யிருக்கிறேன்.

திரு. கே. டி. கே. அவர்கள் நடன ஆசிரியர் மலேஷிய மகாலிங்கம் மரணம் குறித்துச் சொன்னார்கள். போலீஸ் அறிக்கையில், போலீஸ் கமிஷனர் தவறான அறிக்கை கொடுத்தார்; பின் மாற்று அறிக்கை கொடுத்தார் என்று சொன்னார்கள். நான் பத்திரிகைகளை தேடச் சொன்னேன். மலேஷிய மகாலிங்கம் பற்றிய செய்தியை எடுத்துவா என்று சொன்னால் என் வீட்டிலிருந்த பையன் மலேஷிய சாம்பசிவம் கொல்லப்பட்டது

பற்றி எடுத்து வந்தான். உள்ளபடியே கே. டி. கே. அவர்கள் மலேசிய சாம்பசிவத்தப் பற்றி பேசியிருந்தால் நான் ரொம்ப மகிழ்ச்சியடைந்திருப்பேன். ஏனென்ருல் மலேசியா சாம்பசிவம் மலேஷிய கணபதியோடு அங்கு உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டு, கணபதி தூக்குக்குப் போன பிறகு, இந்திய அரசின் கருணை காரணமாக விடுவிக்கப்பட்டு, தமிழ்நாட்டுக்கு வந்தார். அவர் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்—அந்த எண்ணங்கள் கொண்டவர். ரொம்ப கஷ்டத்தில் இருந்தார். கஷ்டப்படும் போது எனக்குக் கடிதம் எழுதினுர். நான் உடனே முதலமைச்சர் அவர் நிதியிலிருந்து ஓரளவிற்கு உதவி செய்தேன். அதுகுறித்து திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் என்னிடம் அதைப் பாராட்டிக் கூடச் சொல்லியிருக்கிருர்கள். அவரைத் திடீரென்று ஒருநாள் வட ஆற்காடு மாவட்டத்தில் எதிரிகள் சிலபேர் கொன்று விட்டார்கள் என்று சொல்லப்பட்டது. அதைக் கேள்விப்பட்டு நான் மெத்த வருத்தப்பட்டேன். இது மலேஷிய சாம்பசிவம் விவகாரம்.

ஆனுல் திரு. கே. டி. கே. சொன்னது, மலேஷிய மகாலிங்கம் விவகாரம்; இந்த விவகாரத்தில் கமிஷனர் இரண்டு முரண்பட்ட அறிக்கைகள் கொடுத்ததாகச் சொல்வது தவருகத்தான்படுகிறது. நான் எல்லாப் பத்திரிகைகளையும் தேடிப் பார்த்தேன். அவர் 6-ந் தேதி இரவு கீழே விழுந்து இறந்தார் என்ற செய்தி பத்திரிகையில் வரும்போது, பத்திரிகைகளில் "மகாலிங்கம் கொலை" என்றுதான் தலைப்புப் போட்டார்கள். வந்த செய்தி பத்திரிகைக்குக் கமிஷனர் அப்படிச் சொன்னுர் என்று வரவில்லை. பத்திரிகை செய்தி, மலேஷிய மகாலிங்கம் கொலை என்று வந்ததே தவிர கமிஷனர் சொல்லவில்லை. மகாலிங்கம் கொலை செய்யப் பட்டது பற்றி போலீஸ் கமிஷனர் ஷெனுயிடம் நிருபர்கள் கேட்டார்கள். அதற்கு கமிஷனர் சொன்னது, "பிரேதப் பரிசோதனை அறிக்கை கிடைத்த பிறகுதான் இதுபற்றி எதுவும் கூற முடியும்; அவர் உடலில் வெளிக் காயங்கள் இல்லை என்ருலும் உள் காயங்கள் இருக்கிறதா என்பது பிரேத பரிசோதனையின் போது தெரியும்" என்று கமிஷனர் கூறியிருக்கிருர்.

அதற்குப் பிறகு பிரேத பரிசோதனை நடந்தது. பிரேத பரிசோதனையில் பஞ்சாயத்தார் மேலே இருந்து கீழே விழுந்து இறந்தார் என்று—பஞ்சாயத்தில் 5 பேர் இருந்தார்கள்—சொல்லி, அந்த பிரேதப் பரிசோதனை சர்டிபிகேட்டை வைத்து முடிவு

செய்தார்கள். அந்த முடிவைத்தான் மறுபடியும் போலீஸ் கமிஷனர், மலேஷிய மகாலிங்கம் செத்தது எப்படி என்று நிருபர்கள் கேட்க, அவர்களுக்குப் பதில் அளித்திருக்கிறார்களே அல்லாமல், கொலை என்று அறிவித்துவிட்டு மறுபடியும் தற்கொலை என்று அறிவித்தார் என்று கூறுவது பொருத்தமுடையது அல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றும் திரு. தங்கமணி அவர்கள் சொன்னார்கள். "மலேஷிய மகாலிங்கம் கொலை செய்யப்படுகிறார்; கமிஷனர் அறிவிக்கிறார் கொலை என்று. மறுநாள் தற்கொலை என்று கமிஷனர் அறிவிக்கிறார், அதற்கு மறுநாள் அவர் அடிஷனல் ஐ.ஜி. ஆகிறார்". என்று கே. டி. கே. அவர்கள் பேசியிருக்கிறார்கள். கே. டி. கே. தங்கமணி போன்றவர்கள் இப்படிப் பேசுவதுதான் எனக்கு ரொம்ப ஆச்சரியமாக இருக்கிறது. ஏனென்றால் அதற்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. அடிஷனல் ஐ.ஜி. பதவிக்கு, ஐ.ஜி. அவர்களிடமிருந்து "பிரபோசல்" வந்து அதற்கு அரசாங்கத்தின் சார்பில் நான் கையெழுத்து போட்ட தேதி 5—8—1974. மகாலிங்கம் மாடியிலிருந்து விழுந்து இறந்தது 6—8—1974—அந்த போஸ்டுக்கு ஒப்புதல் அளிக்கப் பட்டது 5—8—1974. ஆகவே இந்த இரண்டையும் இணைத்துப் பேசுவது முறையாகாது.

(பிற்பகல் 1-30)

"இவர் எப்படி அடிஷனல் ஐ.ஜி. ஆகலாம்", செழியன் கூட வேண்டுமென்றே இதைச் செய்தீர்கள் என்றார்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தானாகவே விழுந்து இறந்திருக்கலாம். நான்கு பேர்கள் தள்ளியும் விட்டு இறந்திருக் கலாம். தானாகவே விழுந்தார் என்றால் சூயிசைட்--நான்கு பேர்கள் தள்ளி விட்டிருப்பார்களானால் மர்டர். அந்தச் செய்தி கிடைத்தவுடன் அது பற்றி புலன் விசாரணை நடத்திக் கொண்டி ருக்கிறோம் என்று சொன்னார்கள். இப்போது அந்த கேசே டிராப் செய்யப்பட்டிருக்கிறது. எனக்கு நேரிடையாகத் தெரியாது! எனக்குக் கிடைத்த விவரங்களைச் சொன்னேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** முதலில் கொலை என்று கமிஷனர் அறிக்கை விட்டார்; பிறகு தற்கொலை என்று அறிக்கை விட்டார் என்று சொன்னதற்குத்தான் விளக்கம் தந்தேன். கொலை

என்று அறிக்கை விட்ட கமிஷனர் மறுநாள் தற்கொலை என்று அறிக்கை விட்டதும் அவருக்குப் பதவி கொடுக்கப்படுகிறதென்றால் என்ன காரணம் என்று மர்மமாகப் பேசியதற்குத் தான் நான் பதில் சொல்ல விரும்புகிறேன்.

அடிஷனல் ஐ.ஜி. பதவி நம்முடைய மாநிலத்தில் மாத்திரம் அல்ல; எல்லா மாநிலங்களிலும் இருக்கிறது. மத்திய அரசு அடிஷனல் ஐ.ஜி. பதவி ஒன்றை தமிழகத்திற்குத் தந்தது. அந்த யாருக்குத் தருவது என்கிற நோக்கில் எந்த முறைப்படி செய்யப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

திரு. அருள் அவர்கள் ஐ.ஜி. யாக இருக்கிறார். அவருக்கு அடுத்ததாக இருக்கிற ஸ்டிரேசி ஐ.ஜி. (ஃபுட்.செல்) என்ற பதவியில் இருக்கிறார். அதற்கடுத்த, சங்கரன் நாயர் டெல்லியில் ஐ.ஜி. பதவிக்குச் சமமான பதவியில் இருக்கிறார். அதற்கடுத்த சிங்காரவேலுவும், குப்புசாமியும் ஓய்வுபெற்று விட்டார்கள். ஆறாவதாக இருக்கிற ஆர். என். மாணிக்கம் டெல்லியில் ஐ.ஜி. பதவிக்குச் சமமான பதவியில் இருக்கிறார். ஏழாவதாக இருப்பவர் தான் ஷெணாய். ஆகவே, எல்லா வகையிலும் அந்தப் பதவிக்குத் தகுதியானவருக்குத்தான் அடிஷனல் ஐ.ஜி. என்கிற அந்தப் பதவி தரப்பட்டிருக்கிறதே அல்லாமல் எந்த முறைகேடும் இதில் நடைபெறவில்லை.

விசாரணைகளின் அறிவிப்புகள் எல்லாம் இங்கே வைக்கப் படவில்லை, வைக்கப்பட்ட அறிவிப்புகளின் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று திருமதி அனந்தநாயகி அம்மையார் இங்கே குறிப்பிட்டார். பெரியகுப்பம் நிகழ்ச்சி பற்றி ஏன் அறிக்கை வைக்கவில்லை என்று கேட்டார்கள்.

ஒரு புதிய மாறுதல் முன்பிருந்த அரசுகளுக்கும் இப்போதுள்ள அரசுக்கும் உண்டு. அதாவது முன்பெல்லாம் விசாரணையே கிடையாது. விசாரணை நடந்தால் தானே, ஏன் அறிக்கையை சபையில் வைக்கவில்லை என்று கேட்க முடியும். இப்போதுள்ள தொல்லை எல்லாம் நாங்கள் விசாரணை வைத்து விடுகிறோம். அதனால் அறிக்கை எங்கே, எங்கே என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் இது ஒரு 'ஜுடிஷியல் என்கொயரி' கூட அல்ல. 'ஜுடிஷியல் என்கொயரி'-இன் அறிக்கைகள் எல்லாம் வைக்கப்படுகின்றன. ஒரு அதிகாரி

யினுடைய விசாரணை அறிக்கை வைக்கப்பட வேண்டுமென்று உறுப்பினர்கள் விரும்புவார்களானால் அதையும் வைக்கத் தயாராக இருக்கிறோம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இந்தப் பெரியகுப்பம் சம்பந்தமாக பலதரப்பட்ட கருத்துக்கள் இருப்பதால் அந்த அறிக்கையை இந்த மன்றத்தில் வைப்பதன்மூலம் தவறான கருத்துகள் அகற்றப்படுவதற்கு உதவியாக இருக்கும். ஆகவே, அந்த அறிக்கையை இந்த அவைமுன் வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அது அச்சாகிக் கொண்டிருக்கிறது. முடிந்ததும் இந்த அவையில் வைக்கப்படும். ஆனால் அதிலே தரப்பட்டிருக்கிற குறிப்புகளை மாத்திரம் இங்கே படிக்க விரும்புகிறேன்.

1. இரண்டு தனிப்பட்ட நபர்களிடையே எழுந்த ஒரு சாதாரண பூசல் அரசியல் காரணமாக அசாதாரணமாக மிகைப் படுத்தப்பட்டு அரசியல் லாபம் கருதி தேவையற்ற முறையில் காவல் துறையினர் மீதும், ஏதும் அறியாத மற்றவர்கள் மீதும் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

2. 12—5—1973 அன்று காவல் துறையினர் பெரியகுப்பம் கிராம மக்களைத் துன்புறுத்தியதாகவும், சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்ததாகவும், அக்கிராமத்துப் பெண்களை மான பங்கம் செய்ததாகவும், கற்பழித்ததாகவும் கூறப்பட்ட புகார்கள் தகுந்த ஆதாரமற்றவையாதலால் அவைகள் நிராகரிக்கப்பட வேண்டியவையாகும்.

3. 13, 14 மே 1973 ஆகிய நாட்களில் போலீசார் பெரிய குப்பத்தில் தங்கியிருந்தனர் என்ற குற்றச்சாட்டு ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்படவில்லை. ஆதலால் அக்குற்றச்சாட்டு ஏற்றுக்கொள்ள இயலாததாகும்.

4. திரு. மதுராந்தகம் ஆறுமுகம், எம்.எல்.ஏ., திரு. செய்யூர் பாலகிருஷ்ணன் ஆகிய தி.மு.க. பிரமுகர்களை இச்சம்பவங்களில் சம்பந்தப்படுத்தியது தேவையற்றதும், நியாயமற்றதும், அரசியல் நோக்கமுடைய செயலாகும்.

1975 எப்ரல் 3] [டாக்டர் மு. கருணாநிதி]

5. கிராம மக்களுடைய உடைமைகளுக்குச் சேதம் விளைவித்ததற்கு காவல் துறையினர் பொறுப்பாளிகள் என்று கூற முடியாது. அச் செயல்களை விஷமிகளும், சமூக விரோதிகளும் செய்திருக்கக்கூடும்.

மேலும் இக்குழு கீழ்க்கண்ட பரிந்துரைகளை அரசுக்குக் கூறி யுள்ளது :—

1. பெரியகுப்பம் கிராமம் ஒரு ஒதுக்குப்புறமான இடத்தில் அமைந்துள்ளது. அதற்குச் சரியான போக்குவரத்து வழிகள் அமையாததால் இத்தகைய சம்பவங்கள் நிகழ ஏதுவாகிறது. எனவே அவ்விடத்திற்கு அருகில் பக்கிங்ஹாம் கால்வாயைக் கடப்பதற்கு வசதியாக தேவையான இடங்களில் பாலங்கள் அமைக்க வேண்டும்.

2. கடற்கரையோரப் பகுதிகளாகிய இவ்விடங்களில் கிராமங் களின் பாதுகாப்பிற்காக ஒன்று அல்லது இரண்டு காவல் நிலையங்களை (அவுட் போஸ்டுகளை) அமைக்க வேண்டும்.

3. இந்நிகழ்ச்சியில் கிராம முன்சிப் யாதொரு அக்கறையும் காட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை.

4. இம்மாதிரி நிகழ்ச்சிகளின்போது சட்டம் ஒழுங்கை பராமரிக்கும் உயர்மட்ட அதிகாரிகள் நிகழ்விடங்களுக்கு உடனடி யாகச் செல்வது நிலைமையைக் கட்டுப்படுத்த உதவுவதோடு மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தவும் உண்மையான செய்தியை வெளிப்படுத்தவும் உதவும்.

விசாரணை ஆணைக் குழுவின் தீர்ப்புகளை அரசு ஏற்றுக்கொண்டு அரசு ஆணை வெளியிட்டுள்ளது. இவைகள் இந்த அவையில் வைக்கப்படும்.

பாளையங்கோட்டை சம்பவம் பற்றி வைக்கப்பட்ட அறிக்கைக்கு நடவடிக்கை என்ன எடுக்கப்பட்டது என்று திருமதி அனந்தநாயகி அம்மையார் கேட்டார்கள். அங்கே ஒன்பது நபர்கள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப் பட்டது. சம்பந்தப்பட்ட இன்ஸ்பெக்டர் ராஜசேகரன் 17—3—1973 அன்று மாரடைப்பால் மரணமடைந்து விட்டார். குற்றம் சாட்டப்பட்ட மற்ற 8 பேர்கள் மீது திருநெல்வேலி

தலைமை மாஜிஸ்ட்ரேட் முன்பாக தொடர்ந்து வழக்கு நடத்தப் பட்டது. திருநெல்வேலி தலைமை மாஜிஸ்ட்ரேட் 27—12—1974 அன்று இன்ஸ்பெக்டருடைய மகன்கள் மோகன்குமார், வசந்த குமார் மற்றும் நான்கு காவலர்கள் ஆகியோரை குற்றவாளிகள் என்று தீர்ப்பளித்தார். மோகன்குமாரும், வசந்தகுமாரும் குற்ற வாளிகள் நன்நடத்தை சட்டத்தின் 4(1) விதியின் கீழ் விடுவிக்கப் பட்டனர். நான்கு காவலர்களுக்கு மூன்று மாத கால அளவுக்கு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. இரண்டு தலைமைக் காவலர்கள் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். அவர்களை விடுதலை செய்ததை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு தாக்கல் செய்யலாம் என நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார். அதை அரசு பரிசீலித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

க்ளைவ் ஹாஸ்டல் சம்பந்தமாக அவைகளை விசாரித்து நடவடிக்கை எடுக்க திரு. கார்த்திகேயன் ஐ.ஏ.எஸ். அவர்களிடம் அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதிலே ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ். அலுவலாளர்கள் இருக்கின்ற காரணத்தால் யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷனையும் கலந்து ஆலோசித்து நடவடிக்கை எடுக்க வேண்டியிருப்பதால் அவைகளைப் பற்றி திரு. கார்த்தி கேயன் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்.

அரசியல் கிளர்ச்சிகளைப் பற்றி எல்லாம் சொன்னார்கள். தமிழகத்தில் நடைபெற்ற பல்வேறு அரசியல் கிளர்ச்சிகளில் இந்த அரசு நான் அடிக்கடி சொல்வதைப்போல்

"கடிதோச்சி மெல்ல எறிக"

என்ற குறள்மொழிக்கேற்ப நடந்து வந்திருக்கிறது.

7—8—1970-இல் வலது கம்யூனிஸ்டுக் கட்சி நடத்திய நிலப்பறிப் போராட்டத்தில் 12,757 பேர் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் எல்லாம் 30—8—1970 அன்று விடுதலை செய்யப் பட்டார்கள்.

தண்டனைக் காலம் முடிகின்ற வரை இருந்துதான் தீரவேண்டு மென்று யாரையும் வைக்கவில்லை. முன்பு நாங்கள் எதிர்க்கட்சி யாக இருந்த போதெல்லாம் அப்படி இல்லை. நாங்கள் எல்லாம் 3 மாத காலம் என்று தண்டிக்கப்பட்டால் அதிலே ஒரு மணி

1975 எப்ரல் 3] [டாக்டர் மு. கருணாநிதி]

நேரம் கூடக் குறைவாக யாரும் எங்களை விடுதலை செய்தது கிடையாது. இன்றைக்குத்தான் இந்த அரசு தண்டனைக் காலம் முடிவதற்குள்ளாக அரசியல் கைதிகளை விடுதலை செய்கிற அந்த முறையை ஏற்படுத்தியிருக்கிறது.

உள்நாட்டு ஒத்துழையாமை இயக்கம் என்ற பெயரால் சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சியின் முன்னாள் தலைவர் திரு. நல்ல சிவம் அவர்களும் மற்றும் ஐவரும் கைது செய்யப்பட்டு அன்று மாலையே விடுதலை செய்யப்பட்டார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** அந்தப் போராட்டத்தில் நாங்கள் எல்லாம் கைது செய்யப்பட்டோம். ஆனால் தண்டிக்கப் படாமல் விடுதலை பெற்றோம். ஆகவே தண்டிக்கப்பட்டு, விடுதலை பெற்றோம் என்று சொல்வது உண்மையல்ல.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மொத்தம் கைது செய்யப்பட்ட 12,757 பேர்களில் 30-ஆம் தேதி விடுதலை செய்யப் பட்டவர்கள் 11,651. மன்னிப்புக் கடிதம் கொடுத்து விடுதலை பெற்றவர்கள் 1,048. தண்டனை பெற்றபின் அரசின் ஆணையின் பேரில் விடுதலை செய்யப்பட்டவர்கள் 58. நான் இந்த விவரங்களைச் சொல்ல வேண்டாமென்று கருதினேன். திரு. தங்கமணி கேட்ட தால் சொன்னேன்.

சத்யமேவ வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

உணவு—வேலையில்லாமை ஒழிப்புப் போராட்டம் என்ற பெயரால் நடைபெற்ற போராட்டத்தில் 3—10—1972 முதல் 5—10—1972 வரை இந்திய கம்யூனிஸ்டுகள் 3,505 பேர் கைது செய்யப்பட்டு அன்று மாலையே விடுவிக்கப்பட்டார்கள். 18—10—1972 முதல் 20—10—1972 வரை மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கள் நடத்திய போராட்டத்தில் 8,159 பேரும் அன்றையதினமே விடுதலை செய்யப்பட்டார்கள்.

ஆசிரியர்கள் போராட்டத்தில் 30—4—1972 முதல் 16—5—1972 வரை ஆயிரம் பேருக்கு மேல் கைது செய்யப்பட்டு அவர்கள் 16—5—1972-இல் விடுதலை செய்யப்பட்டார்கள்.

3—10—1973 முதல் 12—10—1973 வரை பழைய காங்கிரஸ் கட்சியினர் நடத்திய மதுவிலக்குப் போராட்டத்தில் 32,838 பேர் கைது செய்யப்பட்டு, போராட்டம் முடிந்த 12—10—1973 அன்றே விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலே இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். அந்தக் கிளர்ச்சியின்போது, திருச்சிச் சிறைச் சாலையில் இருந்த காங்கிரஸ்காரர்கள் அங்கே ஏற்பட்ட ஒரு

கலவரத்தில் அங்கே பறந்து கொண்டிருந்த தேசியக் கொடியை இறக்கிவிட்டு, கட்சியின் கொடியை ஏற்றினார்கள். அவர்கள் மீது வழக்கு போடப்பட்டது. ஆனால், அந்த வழக்குக் கூடத் திரும்பப் பெறப்பட்டது என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

• 1974-ம் ஆண்டு சென்னையில் மட்டும் 50-க்கு மேற்பட்ட கிளர்ச்சிகள் நடைபெற்று, அந்தக் கிளர்ச்சியிலே ஈடுபட்ட அத்தனை பேரும் கைது செய்யப்பட்டு, அவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட்ட நிகழ்ச்சிகள்தான் நடைபெற்றிருக்கின்றன. 1975-ம் ஆண்டு, இந்த மூன்று மாதத்தில் மாத்திரம் 22 கிளர்ச்சிகள் நடைபெற்று, அதிலே கைது செய்யப்பட்டவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இதைப் போலவே, மாணவர்கள், தொழிலாளர்கள் கலந்து கொண்ட வழக்குகள் 50-க்கு மேல் கைவிடப்பட்டிருக்கின்றன. தொழிலாளர்கள் மீது கனிவு கொண்ட பல தலைவர்கள் இங்கே இருக்கிறார்கள், எதிர்க் கட்சியிலும் சரி, ஆளுங்கட்சியிலும் சரி. அந்த வகையிலேகூட தொழிலாளர்கள் மீது போடப்பட்ட வழக்குகள் அனைத்தும்—நான் தேதி வாரியாக வைத்திருக்கிறேன் —50-க்கு மேற்பட்ட வழக்குகள் அனைத்தும் வாபஸ் பெறப்பட்டன என்று நான் கூறிக்கொள்வேன்.

சட்டக் கல்லூரி மாணவர்கள் விடுதி—போராட்டம் பற்றி பொன்னப்ப நாடார் அவர்களும் ஹாண்டே அவர்களும் இங்கே பேசினார்கள். வகுப்பு வெறி இன்றைக்குக் கல்லூரிகளிலே நுழைந்திருப்பது உள்ளபடியே, மிகமிக வேதனை தரக்கூடிய ஒன்றாகும். பெரியார் அவர்களும், அண்ணா அவர்களும், ஏன் காந்தியடிகள் போன்றவர்களும் அவர்கள் வழி வந்தவர்களும், மற்றக் கட்சித் தலைவர்களும் இன்றைக்குச் சாதி பேதம், சாதி வெறி கூடாது என்பதற்காக உழைத்து வருகிறோம். ஆனால் நம்மையும் அறியாமல் இன்றைக்கு இப்படிப்பட்ட வகுப்புவாத குரோத எண்ணங்கள் நம்முடைய சமுதாயத்திலே ஊடுருவுவது இந்தச் சமுதாயத்திற்கு ஏற்படுகிற ஒரு பயங்கரமான புற்று நோய் என்றுதான் நான் கூற விரும்புகிறேன்.

இந்த அரசைப் பொறுத்தவரையில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக, தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் பாடுபடுகிற அரசு என்று நான் பலமுறை அழுத்தந்திருத்தமாக எடுத்துச் சொல்லி

1975 ஏப்ரல் 3] [டாக்டர் மு. கருணாநிதி]

யிருக்கிறேன். இதிலே வேடிக்கை என்னவென்றால், எந்தப் பின் தங்கிய மக்களுக்காகப் பாடுபடுகிறோமோ, அந்தப் பின்தங்கிய மக்களே இரண்டு கூறுகளாக, மூன்று கூறுகளாகப் பிரிந்து கொண்டு ஒருவரையொருவர் தாக்கிக் கொள்வதும், எந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் பாடுபடுகிறோமோ, அந்தத் தாழ்த்தப்பட்ட மக்களே அவர்களுக்குள் இரண்டு கூறுகளாக, மூன்று கூறுகளாகப் பிரிந்து கொண்டு, அவர்களுக்குள் சச்சரவுகளை வளர்த்துக் கொள்வதும் விரும்பத்தக்கக் காரிய மல்ல.

ஆகவே, சாதி ஒழிய வேண்டுமென்பதை நாம் உதட்டளவிலே உச்சரிக்கின்ற வார்த்தையாக வைத்துக் கொள்ளாமல், உள்ளத்திலே பதிய வைத்துக்கொள்ள வேண்டுமென்று ஆளுங் கட்சியிலே இருக்கிறவர்களையும் கேட்டுக்கொள்வேன், எதிர்க் கட்சியிலே உள்ளவர்களையும் கேட்டுக்கொள்வேன், தோழமைக் கட்சியிலே இருக்கிறவர்களையும் கேட்டுக் கொள்வேன், சமுதாயத்திலே இருக்கிற அத்தனை பேரையும் கேட்டுக் கொள்வேன். அதன் காரணமாக, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஏற்பட்ட கலவரங்களானாலும், சட்டக் கல்லூரி மாணவர் விடுதியில் ஏற்பட்ட கலவரமானாலும், உள்ளபடியே சகித்துக் கொள்ளத் தக்கதல்ல. அவைகளைப் பற்றி மேலவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. இராசாராம் நாயுடு அவர்கள் கூட மேலவையில் அதற்காக ஒரு அதிகாரியை வைத்து விசாரணை வைக்கக் கூடாதா என்று கேட்டார்கள். அதையெல்லாம் மனதிலே கொண்டு, இங்கே பேசிய உறுப்பினர்களின் கருத்துக்களை மனதில் கொண்டு, அந்தச் சம்பவங்களைப் பற்றி விசாரிப்பதற்காக ஐ.ஜி. அவர்களை அதற்காக நியமித்து, அவரை அதற்காக ஒரு அறிக்கை அனுப்ப வேண்டுமென்று இந்த அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கீழ் வெண்மணிச் சம்பவம், பற்றிச் சொன்னார்கள். அந்தத் தீர்ப்பினால் கீழ்க்கோர்ட்டில் தண்டிக்கப்பட்டவர்கள், உயர்நீதி மன்றத்தில், எல்லா எதிரிகளும் விடுதலை செய்யப்பட்டு விட்டார்கள். கே. டி. கே. அவர்கள் வருத்தம் தெரிவித்தார்கள், இப்படி விடுதலை செய்தார்களே என்று. தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. எ. கே. சுப்பையா அவர்கள் இப்பொழுது பேசும்பொழுது கூடக் குறிப்பிட்டார்கள். பலரும் அதற்காக வருத்தம் தெரிவித்தார்கள். சம்பவம் நடந்தது

உண்மை. ஆனால் அந்தச் சம்பவத்திலே குற்றஞ் சாட்டப் பட்டவர்கள் விடுதலை அடைந்திருக்கிறார்கள். அப்படி விடுதலை அடைந்ததை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்திலே அப்பீல் செய் வதற்கு, Certificate of leave to appeal உயர் நீதிமன்றத்தில் அரசின் தரப்பிலே கேட்கப்பட்டது. உயர் நீதிமன்றம் அதை மறுத்துவிட்டது. அப்படி மறுத்துவிட்ட காரணத்தால், உச்ச நீதிமன்றத்திலே special leave petition 22—3—1975-லே பதிவு செய்துள்ளோம் என்பதை மாத்திரம் நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்வேன்.

அதிகாரிகளை மாற்றுவதைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். நல்ல அதிகாரிகளை மாற்றிவிடுகிறீர்கள்; தீய அதிகாரிகளை மாற்றாமல் விட்டு விடுகிறீர்கள் என்ற கருத்தை கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னார்கள். செழியன் அவர்கள் இஷ்டப்படி ஆளுங்கட்சி சொல்கிற நேரத்தில் எல்லாம் அதிகாரிகளை மாற்றுகிறார்கள் என்று சொன்னார்கள். ஆகவே, மாற்றுவது என்ற கொள்கையை நாம் அனைவரும் ஒத்துக் கொண்டிருக் கிறோம். இதிலே நல்லவர்கள் யார், தீயவர்கள் யார், என்பதிலே தான்—தீர்மானிக்கும் நேரத்தில்தான் நமக்குள்ளே அபிப்பிராய பேதம் வருகிறதே தவிர, நல்லவர்களாக இருந்தால் இருக்கலாம், தீயவர்களாக இருந்தால் மாற்றலாம் என்கிற அந்தக் கொள்கையை ஏதோ ஒரு வகையில் எதிர்க்கட்சியின் சார்பாக பேசியவர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஏதோ ஆளுங் கட்சியின் சார்பில் ஆயிரக்கணக்கில் சிபாரிசுகள் தருகிறார்கள் என்று சொன்னார்கள். செழியன் அவர்கள் கூட ஆளுங் கட்சியிலே இருந்தபோது சிபாரிசுகளைக் கொடுக்க வில்லையா? எவ்வளவோ கொடுத்தார்கள். கேட்டால் தரலாம் என்று என்னிடத்திலே கூட வைத்திருக்கிறேன். இவ்வளவு கடிதங்களை (அவையில் காண்பித்து) செழியன் அவர்கள் இப்படிப்பட்ட காரியங்களுக்காகக் கொடுத்தவைதான்.

**திரு. கோவை செழியன்:** பேரவைத் தலைவரவர்களே, நான் ஆளுங் கட்சியிலே இருந்தபொழுது கொடுத்திருக்கிறேன். எப்பொழுது கொடுத்திருக்கிறேன் என்றால், என்னுடைய தொகுதி யிலே இருக்கிற அதிகாரிகளை வேறு யாராவது தலையிட்டு மாற்றுகின்றபொழுது அல்லது தலையிடுகின்றபொழுது, நான்

அவைகளைத் தடுக்கச் சொல்லியிருக்கிறேன். ஆனால், நானாக அவரை மாற்று, இவரை மாற்று, எனக்குப் பிடிக்கவில்லை என்று சொன்னது கிடையாது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நீங்கள் நிறையக் கொடுத்தீர்கள். கொடுத்த எல்லாவற்றையும் நான் செய்தேனா என்று கேட்கிறேன்.

**திரு. கோவை செழியன்:** நான் நியாயமானதைத்தான் சொன்னேன். நியாயமானதைச் செய்தீர்களென்று நம்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நியாயமானதைச் செய்தீர்கள் என்று நம்புகிறேன் என்று சொல்கிறார். ஆக, ஆளுங் கட்சியில் இருப்பவர்கள் கொடுத்தாலும், நியாயமாக இருந்தால் தான் செய்வேன்; அநியாயமாக இருந்தால் செய்யமாட்டேன் என்று அவரே ஒத்துக் கொண்டதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சாதாரணமாக, ஒரு அதிகாரி ஓரிடத்திலே 3 வருடகாலம் இருக்க வேண்டுமென்ற நியதி யிருக்கிறது. அப்படியிருக்கும்போது ஒரு அதிகாரி 3 வருடத்திற்குள்ளாக மாற்றப்படுகிறார். சில அதிகாரிகளுக்கு இன்னும் 6 மாத காலம் இருக்கிறது ரிட்டையர் ஆக. அதற்குள்ளே—ரிட்டையர் ஆக 1 வருடம் இருந்தால் சாதாரணமாக மாற்றுவது கிடையாது—மாற்றுகிறார்கள். இப்படி மாற்றுகிறார்கள் என்பதற்காகத்தான் சொன்னேனே தவிர, நல்லவர் கெட்டவர் என்ற பிரச்னைக்கு நான் வரவில்லை. ஆனால், சில குறிப்பிட்ட அதிகாரிகளை 1 வருடம், 2 வருடம் ஆன உடனே மாற்றுவதும், சில அதிகாரிகளை 3 வருடம் ஆன பிறகும் மாற்றப் படாமல் இருக்கிற அந்த முறைகள் பல இடங்களிலே இருக்கின்றன.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், மற்ற கட்சிகளைச் சேர்ந்தவர்கள் கொலை செய்யப்படுகிறார்கள். தாக்கப்படுகிறார்கள் என்றெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. ஆளுங் கட்சியிலே உள்ளவர்களும் கொலையுண்டிருக்கிறார்கள். உடுமலைப் பேட்டையில் அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர் கொல்லப்பட்டதைப்

பற்றிச் சொன்னார்கள். பொள்ளாச்சியிலே லத்திப் என்கிற தி.மு.க. வாலிபர் ஒருவர் கொல்லப்பட்டார். அதிலே, அ.தி.மு.க.-வினர் மீது வழக்குத் தொடரப்பட்டு, அவர்கள் விடுதலை அடைந்தார்கள். அரசாங்கம் நீதிமன்றத்தினை தன்னுடைய கையிலே வைத்திருக்கவில்லை. எது நீதியோ அது நடக்கட்டும் என்கிற வகையிலேதான் அரசாங்கம் நடந்து கொண்டிருக்கிறது, எதிலும் தலையிடுவதில்லை என்பதற்கு இவைகள் எல்லாம் உதாரணம்.

பிரதாப்சந்திரன் கொலை வழக்கிலே கூட, குசேலரும் மற்றும் நான்கு பேரும் விடுதலையாகியிருக்கிறார்கள். இரண்டு பேர் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.

30—7—1972 அன்று முகவை மாவட்டம் குமாரப்பட்டியில் அண்ணா மன்றத்தில் தி.மு.கழகத்தினர் கம்யூனிஸ்ட்களால் தாக்குண்டு, முத்து என்பவர் கொலையுண்டார் என்ற வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியினர் விடுதலை ஆனார்கள். ஆனால் கொலையுண்டது உண்மை. விடுதலையாகிவிட்ட காரணத்தாலேயே சம்பவம் இல்லையென்று ஆகிவிடுமா? கே.டி.கே. கூட சொன்னார்கள், சிலர் விடுதலையாகிவிடுகிற காரணத்தாலேயே சம்பவம் நடந்தது இல்லையென்று ஆகிவிடுமா என்று கேட்டார். கொலையுண்டது நடந்த சம்பவம்தான்.

அதைப் போலவே, கோவை மாவட்டத்தில் குறிச்சி கிராமத்தில் ஸ்தாபன காங்கிரஸ் விவசாயச் சங்கத்தைச் சேர்ந்தவர்களால், தி.மு.க. வைச் சேர்ந்த ராசு கொலை செய்யப் பட்டார். குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் விடுதலை பெற்றிருக் கிறார்கள்.

தென்னாற்காடு மாவட்டம், தேனாம்பட்டு கிராமத்தில் மலையாளத் தான் என்பவர் அ.தி.மு.க. விலிருந்து மீண்டும் தி.மு கழகத்திற்குத் திரும்பினார். 5—7—1974 அன்று கொலையுண்டார். அவ்வூர் ஊராட்சித் தலைவர் ரகுபதி உட்பட 12 பேர் குற்றஞ்சாட்டப் பட்டார்கள். மூன்றாவது குற்றவாளி கோதண்டபாணிக்கு மட்டும் ஐந்தாண்டுக் கடுங்காவல் தண்டனை அளிக்கப்பட்டது. மற்றவர்கள் விடுதலை அடைந்தார்கள்.

ஆகவே, இந்த அரசியல் கொலைகள் எல்லா கட்சிகளிலும் நடை பெறுகின்றன. அதற்காக நாம் அனைவருமே சேர்ந்து நம்முடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்ள வேண்டியவர்களாக

இருக்கிறோமே அல்லாமல், வன்முறைகள் அரசியலில் தலையெடுக்கக் கூடாது என்பதில் நான் இரண்டுவிதமான கருத்துக்களைக் கொண்டிருப்பவன் அல்ல.

காங்கிரஸ்காரர்களும் கொலைக்கு ஆளாகிறார்கள்; அ.தி.மு.க. வைச் சேர்ந்தவர்களும் கொலைக்கு ஆளாகிறார்கள்; ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்களும் கொலைக்கு ஆளாகிறார்கள்; முஸ்லிம் லீக்கைச் சேர்ந்தவர்களும் கொலைக்கு ஆளாகிறார்கள்; கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களும் கொலைக்கு ஆளாகிறார்கள். எப்படி யிருந்தாலும்கூட நான் எடுத்துச் சொல்கின்ற பொதுவான கருத்து. பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு வன்முறையை ஒரு கருவியாகப் பயன்படுத்துவதை இந்த அரசோ அல்லது ஆளுங் கட்சியாக இருக்கிற தி.மு. கழகமோ அனுமதிக்கவில்லை. ஆதரிக்க வில்லை என்பதை மாத்திரம் நான் இங்கே எடுத்துக் கூற பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும் இதை நீண்டகாலமாக எல்லாத் தலைவர்களும் எடுத்துச் சொன்னாலும் கூட, இடையிலே சில காரியங்கள் நடைபெற்று விடுகின்றன.

வெங்கா தாக்கப்பட்டது பற்றிச் சொன்னார்கள். இன்னும் என்ன செய்கிறது அரசு என்று கேட்டார்கள். அரசு புலன் விசாரித்துக் கொண்டிருக்கிறது. அந்தக் கார் டிரைவர் கைது செய்யப்பட்டார். கமிஷனர் அலுவலகத்தில் தவறான நம்பர்கள் பொறிக்கப்பட்ட 20, 30 கார்கள் நின்று கொண்டிருப்பதைப் பார்த்திருக்கலாம். அந்தக் கார்கள் எல்லாம் கள்ளக் கடத்தல் கார்கள்; கொள்ளை அடிக்கப் பயன்பட்ட கார்கள். ஆனால், அதிலே இருக்கிற நம்பருக்கும் அந்தக் காருக்கும் எந்தவிதமான சம்பந்தமுமில்லை. இப்படி அந்த டிரைவர் கைது செய்யப்பட்டபோது கூட, 'நான் அந்தப் பக்கமே வரவில்லை' என்று சொன்னதாகவும். இருந்தாலும், மேலும் புலன் விசாரணை தொடர்ந்து நடைபெறுவதாகவும், போலீஸ் அதிகாரிகள், கமிஷனர் அவர்கள் எனக்கு எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே அதை அப்படியே விட்டு விட்டோம் என்று நினைக்கத் தேவையில்லை.

சேலத்தில் நடைபெற்ற கொலைபற்றி எடுத்துச் சொல்லப் பட்டது. அதுபற்றியும் புலன் விசாரணை நடைபெற்றுக் கொண் டிருக்கிறது. இரண்டு பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதற்குள் வழக்கு தாக்கல் செய்யப்படாததற்குக் காரணம் இன்னும் புலன் விசாரணை முடிவடையவில்லை.

குசேலர் கேசில் 'பொலிடிகல் மோடிவேஷன்' (அரசியல் தூண்டுதல்) என்று சொல்லப்பட்டிருக்கிறது என்று கே. டி. கே. சொன்னார்கள். நான் பிறகு அந்த ஜட்ஜ்மெண்டை வாங்கிப் படித்துப் பார்த்தபோது அப்படிப்பட்ட வார்த்தையே அதிலே இல்லை. தங்கமணி அவர்கள் மீது போடப்பட்ட கேசிலே கூட, செஷன்ஸ் ஜட்ஜ் 'மோடிவ்' அரசியலாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார் என்று தங்கமணி இங்கே குறிப்பிட்டார். தங்கமணி போன்ற பெரியவர்கள், அனுபவம் வாய்ந்தவர்கள் வயதைச் சொன்னால் கோபித்துக் கொள்வார்களே என்னவோ பத்து ஆண்டுகள் என்னைவிட அதிகம், 61 வயது என்று ஆனந்தவிகடன் வெளியிட்டு இருக்கிறது, அப்படிப்பட்ட பெரியவர்கள் எல்லாம் இப்படிப்பட்ட தகவலை அவைக்குத் தருவது வேதனைக்குரியதாகும். அப்படி தங்கமணி அவர்கள் வழக்கில் நீதிபதி 'மோடிவ்' அரசியல் என்று எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை. அவர் ஆர். எஸ். மங்கலத்தில் பேசிய பேச்சு குறித்த வழக்காகும் அது. ஜட்ஜ் என்ன சொல்லியிருக்கிறார் என்றால்,

" The next point that arises for consideration is whether the words complained of bring home an offence under Section 115 read with Section 302 I.P.C. as alleged by the prosecution. If the speech complained of is translated into English, secording to me, will run as follows :—

" What is the way for the Chief Minister to escape from the enquiry? One way would be to commit suicide like Hitler or he should be beaten to death like Musolini by you all. Except these two courses I do not see any other way to put an end to the Chief Minister "

இது தங்கமணி அவர்கள் பேசிய பேச்சாகும். தங்கமணியைப் போன்றவர்கள்—ஒரு காலத்தில் என்னைப் பாராட்டிப் புகழ்ந்து பேசிய தங்கமணி போன்றவர்கள், என்னுடைய முடிவு இப்படி அமைய வேண்டுமென்று கருதுவார்களேயானால், அந்த முடிவை தங்கமணியைப் போன்றவர்கள் தங்களுடைய கையால் செய்வார்களேயானால், நான் உள்ளபடியே ஒரு தியாகியின் கையால் சாகிறேன் என்ற அளவில்கூட மகிழ்ச்சியடைவேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தீர்ப்பில், அப்படிப் பேசியிருந்தாலும் அது குற்றமாக ஆகாது என்றுதான் இருக்கிறது.

1975 எப்ரல் 3]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நான் நீங்கள் பேசியதைத்தான் சொன்னேன். நீங்கள் எல்லாம் பெரியவர்கள்; நீங்கள் இப்படிப் பேசலாமா? சின்னப் பிள்ளைகள், சில தலைவெட்டிகள் எல்லாம் இருக்கிறார்கள். செழியன் யார் யாருக்கோ ஸ்ரீலஸ்ரீ, மகாசந்நிதானம், என்றெல்லாம் பெயர் வைத்திருக்கிறார். அவரே யாருக்கோ 'தலைவெட்டி' என்று பெயர் வைத்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். ஆகவே, சில தலைவெட்டிகள் எல்லாம் இருக்கிறார்கள். செழியனுக்கு ஒரு இளகிய இதயம் உண்டு. அதுவும் என்பால் அன்பு உண்டு. என்னுடைய தலையை வெட்டுவேன் என்று சொன்னால் செழியனைப் போன்றவர்கள் கேட்டுக் கொண்டிருக்க மாட்டார்கள், ஆகவே தலைவெட்டி என்று யாருக்கோ அவர் பெயர் வைத்து அழைப்பதாக எனக்குக் கேள்வி. ஆனால் அவர் ஒத்துக் கொள்வாரா என்பது வேறு.

**திரு. கோவை செழியன்:** நான் யாரையோ தலைவெட்டி என்று சொன்னதாகவும் யாருக்கோ தலைவெட்டி என்று பெயர் வைத்ததாகவும் ஒரு தவறான கருத்தைச் சொன்னார்கள். நான் யாரையும் தலைவெட்டி என்று சொல்லவில்லை. வரலாற்றிலே வேண்டுமானால் சார்லஸ் மன்னன் தலையை வெட்டுவதாக வரலாம். நான் யாரையும் தலைவெட்டி என்று பெயர் வைத்து அழைக்கவில்லை, அப்படிக் கூப்பிட்டதே கிடையாது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** கூப்பிட்டால் தெரிந்து விடும். சிலரிடம் சொன்னதாகக் கேள்வி. தங்கமணி, அவர் பேசியதை, ஜட்ஜ் குற்றமாக ஒத்துக்கொண்டாரா என்று கேட்டார். ஜட்ஜ் அதைப்பற்றிச் சொல்கிறார்.

"I find such words have been freely used mainly to attain cheap popularity and to get an applause from the audience rather than with an intention of inciting the audience to murder the Chief Minister. If it were the intention of the accused to incite the audience to murder the Chief Minister, he would have used words like " Go and kill him or kill him when he comes here etc. etc. ".

The words uttered by the accused are not capable of inciting the audience to commit the offence of murder nor could they be understood in the manner in which the prosecution has understood.".

இந்தத் தீர்ப்பை என்னைப் படிக்க வைக்கும் அளவிற்கு தங்கமணி என்னை ஆளாக்கிவிட்டாரே என்பதற்காக மிகுந்த வருத்தப்படுகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** எந்தமாதிரியான கேஸ்கள் போடப்பட்டிருக்கின்றன? ஜட்ஜ்மெண்ட் எப்படியிருக்கிறது என்பது இந்த ரெக்கார்டில் இருப்பது பொருத்தமானதுதான்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தங்கமணியைப் போன்ற பெரிய தலைவர்கள் எந்தமாதிரியாகப் பேசுகிறார்கள் என்பதும் இங்கே பதிவாக வேண்டியது மிகுந்த அவசியமாகும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** எதிர்க்கட்சிக்காரர்கள் மீது எப்படிப்பட்ட கேஸ்கள் போடப்பட்டன என்பது ரெக்கார்டில் இருப்பதும் நல்லதுதான்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எங்களுக்கெல்லாம் அண்ணா அப்படிச் சொல்லிக் கொடுக்கவில்லை. ஹிட்லரைப் போல சாக வேண்டும்; முசோலினியைப் போல அடித்துக் கொல்ல வேண்டும் என்று கற்றுக் கொடுக்கவில்லை, அப்படிப்பட்ட பண்பை நாங்கள் என்றைக்கும் பெற்றதும் கிடையாது. எதிர்க் கட்சித் தலைவர்கள் எல்லாம் நீண்ட காலம் வாழ வேண்டுமென்று தான் நாங்கள் கருதுவோம். அப்போதுதான் ஒருவருக்கொருவர் நம்முடைய அறைகூவலை ஏற்றுக்கொண்டு வாழ்ந்து, அதைப் பார்க்க வேண்டும். "அவனைக் கொன்றுவிட வேண்டும், விசாரணை யிலிருந்து தப்புவதற்கு அவன் ஹிட்லரைப் போல தற்கொலை செய்துகொள்ள வேண்டும்" என்று பேசியிருக்கிறார். ஆனால், ஜட்ஜ் கைதட்டலுக்காக (அப்ளாஸ்) அப்படிச் சொல்லியிருக்கிறார் என்று சொல்லியிருக்கிறார். இதே தங்கமணி அவர்கள் வாணி மகாலில் ஒரு முறை என்னைப் பாராட்டிப் பேசியதை நான் மறந்துவிடவில்லை. அப்படிப் பேசிய தங்கமணிதான், இப்படிப் பேசியிருக்கிறார். தங்கமணி போன்றவர்களே இப்படிப் பேசினால், அரசியலில் இளவெட்டுக்களாக இருப்பவர்கள் எந்த அளவிற்குப் பேச ஆரம்பித்து விடுவார்கள் என்பதற்காகத்தான் சொல்கிறேன். உருக்கத்தோடு ஒவ்வொரு அரசியல் தலைவர்களும் மனதில் பதிய வைத்துக்கொள்ள வேண்டிய ஒன்று என்பதற்காகச் சொல்கிறேன்.

ஹாண்டே அவர்கள் காவல் துறையில் வறட்சி நிவாரண நிதி கட்டாயமாக வசூலிக்க வேண்டுமென்று ஒரு ஆர்டர் போயிருப்பதாகச் சொன்னார்கள். அதில் நான் உன்னிப்பாக கவனித்தேன், அதிலே

" I appeal to all members of the Police Department, executive and ministerial including last grade servants to contribute *voluntorily* one day's salary. ".

என்றுதான் இருக்கிறது. அதிலே 'வாலண்டிரி' அதாவது அவர்களாக முன்வந்து தரவேண்டுமென்று இருக்கிறதே தவிர, 'கம்பல்சரி' என்று இல்லை. இவ்வளவு சூட்டிற்குப் பிறகு தீயணைப்பு இல்லாவிட்டால் நன்றாக இருக்காது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** திண்டுக்கல் ஆர்.டி.ஓ. என்குயரி கேஸ் பற்றிச் சொல்ல வேண்டும். உங்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்ற முறையில்தான் நான் அதைப்பற்றி கட்மோஷன் ஏற்கனவே கொடுத்திருக்கிறேன். இந்நேரம் உங்களுக்கு பர்டிகுலர்ஸ் வந்திருக்குமென நினைக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தனித்தனியாகச் சொல்லப்பட்ட புகார்கள் எல்லாம் குறித்து வைக்கப்படுகின்றன. அவைகளைப் பற்றியெல்லாம் தகவலறிந்து வேண்டுமானால் ஹாண்டே அவர்களுக்குத் தனியாகத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன் என்று சொல்லி, தீ அணைக்கும் படை இந்த ஆண்டு 26 இடங்களில் அமைக்க வேண்டுமென்று அறிவிக்கப் பட்டிருக்கிறது. அதற்கான இடங்கள் எல்லாம் பார்க்கப்பட்டு, இன்னும் ஆறு மாதக் காலத்தில் மேலும் 26 இடங்களில் வைக்கப்பட வேண்டும் என்ற அரசின் அறிவிப்பு செயல்படுத்தப் படும் என்றும் தெரிவித்துக் கொண்டு இந்த மானியத்திலே நல்ல பல கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்தத் துறையிலே உள்ள அதிகாரிகள் நல்ல முறையிலே செயல்பட அவை ஏதுவாக உள்ள கருத்துக்களாக அமைந்து இருக்கின்றன என்று சொல்லி இந்த அளவிலே அமைகிறேன். வணக்கம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட்டிலே தீயணைப்புப் படை சம்பந்தமாக பரிந்துரை இருக்கிறதே, அதைக் கவனிப்பார்களா ?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கராத்தே பயிற்சியை போலீஸாருக்குக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இப்போது அந்தப் பயிற்சி நிறுத்தப்பட்டு உள்ளது. அதை மீண்டும் கொடுக்க இந்த அரசு முயற்சி எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கராத்தே பயிற்சியை நான்தான் முதல் முதல் பார்த்துவிட்டு, காவலர்களுக்குச் சிபாரிசு செய்து அந்தப் பயிற்சியைக் கொடுக்கச் சொன்னேன். இடையில் நிறுத்தப்பட்டு விட்டதாகச் சொல்கிறார்கள். எங்கே அதை எதிர்ப்பார்களோ என்று எண்ணியிருந்தேன். அவர்களே சொல்லிவிட்ட காரணத்தினால் அது தொடர்ந்து நடைபெறும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது.

திரு. பி. வெங்கடசாமி அவர்கள் இருக்கையில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்பட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றதாக அறிவிக்கப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திருவாளர்கள் என். டென்னிஸ், க. உரொ. எட்மண்ட், எம். சுரேந்திரன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியோடு, திரும்பப் பெறப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண். 15—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 26,47,68,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

திரு. பி. வெங்கடசாமி அவர்கள் இருக்கையில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்பட்டது.